ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

திவ்யகவி - நாராயணதாசரவர்கள் இயற்றிய

வடவேங்கட

நாராயண சதகம்

மூலமும் உரையும்

OFFICE OF THE REGISTRAR OF
11 OCT 1949
MADRAS

பதிப்பாளர்:

அ. குழந்தைவேல் முதலியார்

தெய்வமகள் விலாச அச்சுக்கூடம்

சென்னை

இதன் விலை] 1949 [அணா 6

24. தாண்டவராயப்பிள்ளை வீதி.

TAMIL NADU ARCHIVES LIBRARY
EGMORE, MADRAS-600 008
102229

AKM

* சென்னை *
தெய்வமகள் அச்சு நிலையம்.



ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

வடவேங்கட

நாராயணசதகம்

மூலமும் உரையும்

பாயிரம்

நேரிசை வெண்பா

நஞ்சு வினைக்கா மமுதம் நமதுயிரைக்காக்கும்
செஞ்சொல்லி னோர்சதகஞ் செப்பியது—விஞ்சு
நாரா யணதாசர் நன்றாக நானிலத்தே [புகழ்
பாரா யணஞ்செய் பவர்க்கு.

இதன்பொருள். மிகுந்த புகழையுடைய நாராயணதாச ரென்பவர் செஞ்சொற்களினாலே

திருவாய் மலர்ந்தருளிய நாராயணசதகமென்னும் பாமாலையானது, இந்தப் பூமியினிடத்தில் அன்போடு பாராயணஞ் செய்பவர்களாகிய நமக்கு நம்முடைய ஊழ்வினையை யழிக்கும் விஷமாகும்; நம்முடைய உயிரைக் காக்கும் அமுதமாகும் என்றவாறு.

காப்பு

நேரிசை வெண்பா

நல்லவட வேங்கடத்து நாரா யணசதகம்
சொல்ல வெனக்குத் துணையாமே—மல்லற் [ந்
பணையான திண்புயத்துப் பாண்டவர்க்கு முன்ன
துணையான பாதந் துணை.

இ-ள். அழகிய வடக்கின்கணுள்ள திருவேங்கடத்தி லெழுந்தருளிய ஸ்ரீமந் நாராயணன் விஷயமாக ஓர் சதகமென்னும் பாமாலை பாடுகிறதற்குப் பலம்பொருந்திய பருத்ததாகிய அமுத்தமுள்ள புயங்களைப்படைத்த பாண்டவர்க்கு முற்காலத்தில் துணையாயிருந்த அவருடைய பாதங்கள் துணையாயிருப்பதுமன்றி என்னுயிர்க்கும் அவைகளே துணையாகும் எ-று.

நூல்

கலிவிருத்தம்

பிரிந்திசை வண்ணம்

நீர்கொண்டுதண் மலர்கொண்டுநன் னெறி கொண்டுநின் குறிகொண்டுவண், சீர்கொண்டுவந் தனைசெய்துனைச் செறிவார்களென் பெறுவார் களோ, பேர்கொண்டிலன் பொறிகொண்டிலன் பெரியோர்களா லருள்கொண்டிலன், நார்கொண்டு கண் டருள்சோதியே நாராயணா நாராயணா.

இதன்பொருள். பரிசுத்தமான தீர்த்தங்களை யும் குளிர்ச்சிபொருந்திய புட்பங்களையுங்கொண்டு நன்மார்க்கத்தை யறிந்து தேவரீருடைய சொரு பத்தைத் தெரிந்து அழகிய ஞானத்தைப் பொருந தித் தண்டஞ் சமர்ப்பித்து உம்மை ஆராதனை செய்து அடைந்தபேர்களெல்லாம் என்ன பல னைப் பெறுவார்களோ அறிகிலேன்; நாயினேன் தாசியநாம மூதலிய பஞ்சசமஸ்காரத்தையும் பாக வதராலே கிருபையையுங்கொண்டவனேயலலன்; ஆதலால் அன்பு சுரந்து சந்தோஷித்து இரட் சித்தருளவேண்டும் சோதிமயமாகிய ஸ்ரீமந்நாரா யணா என்றவாறு. 1

பரகாரியம் பலசெய்துனைப் பணியாமலே பிணியானபின், விரகாயிருந் தழுதாவதென் வெறி யார்குணங் குறியார்களோ, உரகாரிமே லுபகாரியா யொருசாரியா வுலவாரியா, நரகாரியே முரகாரியே நாராயணா நாராயணா.

இ-ள். கொலை, களவு, காமம், பொய், வஞ்சனை இவை முதலாகிய அனேக துஷ்டகிருத்தியங்களைச் செய்து தேவரீரைப் பணியாமல் பிணியானது சம்பவித்த பிற்பாடுங் கபடமாயிருந்து அழுததினாலே உண்டாகிய காரியம் ஒன்றுமில்லை. ஆதலால் பயித்தியக்காரர் குணங்களை நல்லோர்களே யறிந்து இரட்சிப்பது கடன், அத்தன்மை போல அடியேனை இரட்சிப்பது உமக்கே கடன். சர்ப்பங்களுக்குப் பகையாகிய கருடவாகனமீதில் எழுநதருளி அடியார்களுக் குபகாரமாக ஒப்பில்லாத சேவையாய் உலாவ் வந்தருளா நின்ற ஐயனே! நரகாசுரனுக்கும் முரகாசுரனுக்கும் வைரியாகிய ஸ்ரீமந் நாராயணா எ-று. 2

சிவனீதலம் புயனீதலிந் திரனீதல்சந் திரனீதலா, தவனீதல்விண் ணவரீதன்மா தவரீதலோடெவரீதலும், அவனீதலந் தனிலெண்ணினுன் னடியாரடிப் பொடியாகுமோ, நவநீதமுண் கருமேகமே நாராயணா நாராயணா.

இ-ள். சிவனும் பிர்மாவும் இந்திரனும் சந்திரனும் சூரியனும் தேவர்களும் ரிஷிகளும் இவர்களுடனே பின்னும் யாவர்களுங்கொடுக்கா நின்ற பலன்களையெல்லாம் பூதலத்திலே எண்ணிப பார்க்குமிடத்தில் அவை தேவரீருடைய அடியார்கள் திருவடித் துகளுக்கும் ஒப்பாகமாட்டாது. ஆதலால் அவர்களை நினைப்பதேயில்லை. கோபாலர் கிருகத்திலே வெண்ணெயை யுண்டருளும் நீலமேகவண்ணனாகிய ஸ்ரீமந் நாராயணா எ-று. 3

அலசத்தகும் பிணிவந்துநா னலையாமலே யமரர்க்கிடுங், கலசத்திலோர் துளிநல்கியென் கவியைக்கொளாய் கருணாகரா, குலசக்கரன் சலசேகரன் குலசேகரன் புகழ்சாகரா, நலசக்கரா சலசக்கரா நாராயணா நாராயணா.

இ-ள். தேகமானது வருத்தத்தை யடையும்படியான நோய்வந்து அடியேன் அலையாமலிருக்கத் தேவர்களுக்குக் கொடுத்தருளாநின்ற கலசத்தமிர்தத்திலே ஒரு துளி கடாட்சித்தருளி அடியேனுடையகவிதையைக் கைக்கொள்ளவேணும். கருணைத்திருமேனியனே! வச்சிரபாணியும் கங்காதரனுங் குலசேகராராகிய ஆழ்வாரும் தோத்திரம் பண்ணுநின்ற கீர்த்தியாகிய சமுத்திரத்தையும் நல்ல சக்கரத்தையும் தாமரைமலர்போன்ற திருக்கரங்களையும் உடைத்தாகிய ஸ்ரீமந் நாராயணா எ-று. 4

எதிரும்பெரும் பிணியும்பரந் திரையுஞ்செறிந் தெழிலும்பறந், துதிரந்திரிந் துடலங்கொளுந் துயரந்தெளிந் துனைநம்பவா, மதியங்கிடந் தொளிருஞ்சடா மகுடந்தொறுந் தொனியும்பவா, னதிவந்தெழும் பதபங்கயா நாராயணா நாராயணா.

இ-ள். தேகத்திலே எதிர்த்துவராநின்ற பெரிதாகிய நோய் மிகுந்து இரைப்பு நெருங்கி அழகு குலைந்து உதிரமுறிந்து கொள்ளாநின்ற துக்கமானது தெளிந்துபோய்த் தேவரீரை அடியேன் நம்பும்படியாகப் பிரசன்னமாகவேண்டும். சந்திரன் வாசமாய்ப் பிரகாசியாநின்ற சிவனுடைய சடாமகுடந்தோறும் முழக்கம் நிறைந்திட

ஆகாயகங்கையானது வந்தருளாநின்றதிருவடித் தாமரைகளை யுடைத்தாகிய ஸ்ரீமந் நாராயணு எ-று. 5

எல்லாருமுன் னுதரத்துளே யென்னேடுமெங் குறைகின்றபேர், அல்லாதுவே றில்லாமையா லனைவர்க்குமோ ரருளல்லவோ, வல்லாருளார் மாட்டாருளார் வறியாருளார்வாழ்வாருளார், நல் லாருளார் பொல்லாருளார் நாராயணு நாராயணு.

இ-ள். அடியேனுடனே ஆத்மகோடிகளெல் லாந் தேவரீருடைய குட்சிக்குள்ளே வாசம் பண் ணுகிறதேயல்லாமல் வேறேயிடமில்லை யாதலால் யாவருக்குஞ் சமானமான கிருபையேயன்றிப் பேதமில்லையே; அத்தன்மையாயிருக்க, இதிலே வலியரென்றும் மெலியரென்றும் தாழ்வினரென் றும் வாழ்வினரென்றும் நல்லவரென்றும் பொல் லாதவரென்றும் உண்டாகியதென்ன மாயமோ ஸ்ரீமந் நாராயணு எ-று. 6

நீகாசுதா நீதூசுதா நீயாடுதா நீமாடுதா, போகாதபேர்க் கிடுசோறெனப் புலையர்க்குநெஞ் சுருகச்சொனேன், ஆகாதகாரியமென்னிடத் தள வற்றதுண் டவையாய்வையோ, நாகாசலா நாகா லயா நாராயணு நாராயணு.

இ-ள். பணம் வஸ்திரம் ஆடு மாடுஞ் சாத மும் இவைகளை நீங்கள் கொடுங்களென்று சொல் லுவதற்கு யோக்கியமில்லாதபேர்களாகிய மிலேச் சருடையநெஞ்சானது உருகும்படியாய்க் கவிதை பாடித் தேடிக்கொண்ட பொல்லாத காரியங்கள்

கணக்கில்லாமல் அடியேனிடத்தி லிருக்கின்றன. அவைகளையாராய்ந்துபாராமல் இரட்சிக்கவேண்டும், சேஷமலையையும் சேஷனாகிய கோவிலையும் பெற்ற ஸ்ரீமந் நாராயணா எ-று. 7

அயனாரெழுத் தளவன்றியே யதிகங்கணப் பொழுதாயினும், பயனாயிருப் பவரில்லையிப் படிமீதிலப் படியன்றியே, வியனாயுனைத் தொழுவார்களவ் விதிவெல்வராய் மறைசொல்லுமே, நயனாரதன் புகழ்சோதியே நாராயணா நாராயணா.

இ-ள். பிரமதேவனானவன் எழுதினபிரகாரமேயல்லாமல் அதிகமாக க்ஷணப்போதாகிலும் இந்தப் பூமியிலே பிரயோசனப்பட்டிருப்பவர் இல்லையெனாலும், அப்படி அல்லவென்று சந்தோஷமாகத் தேவரீரைத் தொழுதபேர்களெல்லாம் அந்த விதிவசத்தைக் கடந்திருப்பார்களென்று வேதங்கள் முறையிடுகின்றதே; நயத்தோடுங்கூடிய நாரதமகாமுனிவர் தோத்திரம்பண்ணநின்ற சோதிமயமாகிய ஸ்ரீமந் நாராயணா எ-று. 8

ஓமங்களால் விரதங்களா லுயர்தீர்த்தயாத்திரைகோடியால், ஏமங்கள்கன் னியரீதலா லெழுபாரையுஞ் சுழல்கின்றதால், ஆமைம்புலன் கடிகின்றதா லடை புண்ணியங் கணமேனுநின், நாமமபுகன் றதுபோலுமே நாராயணாநாராயணா.

இ-ள். ஓமங்களாலேயும் விரதங்களாலேயும் உயர்ச்சிபெற்ற கோடி தீர்த்த யாத்திரைகளாலேயும் சுவர்ணங்களுடனே கன்னிகாதானங்களாலேயும ஏழுபூமியையும் பிரதட்சணம் வந்ததினாலேயும் உண்டாகிய பஞ்சவிந்திரியங்களை நீக்கினதி

ஞலேயும் வாநின்ற புண்ணியங்களெல்லாம் தேவரீருடைய திருநாமத்தை க்ஷணப்போதாகி லுஞ் சொல்லிய புண்ணியத்திற்கு ஒப்பாகமாட் டாது ஸ்ரீமந் நாராயணு எ-று. 9

பாடேனலோ கவிசிந்துனைப் பணியேனலோ பலகாலெழுந், தாடேனலோ பலிபீடமுன் னணு கேனலோசடகோபமே, சூடேனலோவலமாகவே சுழலேனலோ கதியென்றுனை, நாடேனலோ கொடியேனலோ நாராயணு நாராயணு.

இ-ள். தேவரீரைக் கவிதைகளாலே பாடி னதுமில்லை, தண்டஞ் சமர்ப்பித்ததுமில்லை, பல காலமுமெழுந்து ஆடினதுமில்லை, பலிபீடத்தின் முன்னே வந்ததுமில்லை, சடகோபத்தை முடி யிலே சூடினதுமில்லை, வலமாகச் சூழ்ந்தது மில்லை, கதியென்று உன்னை நினைத்ததுமில்லை, இத்தன்மையான பாவியானவன் கடைத்தேறும் மார்க்கமுளதோ? ஸ்ரீமந் நாராயணு எ-று. 10

அறவைக்கெலா மடிமூலநா னருளுக்கெலா மடிமூல நீ, பிறருக்கெலாம் பெறுவித்ததும் பெறு விப்பதும்பிணை தட்டிலே, உறவைக்கிலென் னுயிர் காவலுக் கொவ்வாதுவா துரைசெய்வனே, நற வத்துழா யணிமார்பனே நாராயணு நாராயணு.

இ-ள். லோகங்களுக்கெல்லாம் அடிவோராகி யிருப்பது யானேயன்றிவேறில்லை; கிருபைகளுக் கெல்லாம் மூலகாரணமா யிருப்பது தேவரீரே யன்றி வேறில்லை; அயலார்களுக்கு நீர்செய்த பலனையும் இனிச் செய்கின்ற பலனையுந் தராசி

னுடைய தட்டுகளிலே பொருந்தவைத்தால் என்னுடைய உயிரை இரட்சிக்கிற பலனுக்கு அவை சரியாகமாட்டாது. ஆதலால் வாதுபேசுவதில்லை, தேன்பொருந்துந் திருத்துளவந்தரித்த திருமார்பையுடைத்தாகிய ஸ்ரீமந் நாராயணா எ-று. 11

பசியாதமந் திரமேவரும் பழியாதமந் திரமந்தகன், விசியாதமந் திரநோயிலே விழியாதமந திரநெஞ்சிலே, மூசியாதமந் திரமோதுவார் முதலானமந் திரமொன்றிலே, நசியாதமந் திரமோநமோ நாராயணா நாராயணா.

இ-ள். பசியை எழுப்பாதது, எவர்களாலேயும் பழிப்பில்லாதது, எமன் பாசத்திற் கட்டுப்படாதது, நோயைப் பார்க்காதது, நெஞ்சிலே கெடுதலில்லாதது, ஓதுவார்க்கெல்லாம் முதன்மையானது, ஒன்றினாலேயும் நாசமில்லாதது. அது யாதெனில், ஓம் நமோ நாராயணா வென்னுந் திருமந்திரமே யல்லது வேறில்லை ஸ்ரீமந் நாராயணா எ-று. 12

அபராதமா கியபல்சரக் கடலாகவோ டமதேற்றியே, விபரீதநோ யலையிற்குளே விடநின்ற தூழ் வினையென்செய்வேன், இபராசனைக் கரையேற்றுநீ யெனையேற்றலிங் கரிதல்லவே, நபராசனே சுபராசனே நாராயணா நாராயணா.

இ-ள். அபராதங்களாகிய பல சரக்குகளை நெருக்கமாகத் தேகமென்னும் ஓடத்திலே ஏற்றி விபரீத நோயாகிய கடலுக்குள்ளே ஊழ்வினையானது தள்ளிநின்றது. என்செய்வேன்; கஜேந்தி

ரனைக் கரையேற்றின தேவரீர் அடியேனைக் கரை யேற்றுதற்கு இவ்விடத்தில் அரிதல்லவே; தேவர் களுக்குஞ் சுபங்களுக்குங் கர்த்தாவாகிய ஸ்ரீமந் நாராயணா எ-று. 13

வான்சொல்லுமே புவிசொல்லுமே மறை சொல்லுமே நிறைசேடன்வாய், தான்சொல்லு மே முனிவோர்பெருஞ் சபைசொல்லுமே சசி சொல்லுமே, தேன்சொல்லிபங்கிறைசொல்லுமே திசைசொல்லுமே திகையாமலே, நான்சொல் லவே ஏதுவுமாவெனோ நாராயணா நாராயணா.

இ-ள். தேவர்களுடைய நாவும், உலகத்தோ ருடைய நாவும், வேதங்களுடைய நாவும், கல்வி நிறைந்த ஆதிசேடனுடைய இரண்டாயிரம் நாவும், பெரிதாகிய சபையோடுங்கூடிய முனிவ ருடைய நாவும், சந்திரன் முதலாகிய நவக்கிரகங் களுடைய நாவும், தேன்போலுஞ் சொல்லினை யுடைய பார்வதி பாகத்திலிருக்கும் ருத்திரனு டைய நாவும், திக்குப்பாலகருடையநாவும் தோத் தரிக்கும்படியான தேவரீருடையகீர்த்தியை மாறு படாமல் அடியேனுடைய நாவினாலே சொல்லு வதற்குக் காரணமாவேனோ? சொல்லும் ஸ்ரீமந் நாராயணா எ-று. 14

சுருக்காமருந் துடற்கூறியே சுழற்றுமருந் தழற்றியிலே, உருக்காமருந் துலர்த்துண்டையா வுருட்டாமருந் துழக்கெண்ணெயில், கருக்கா மருந் திகற்கையிலே கசக்காமருந் திருகல்லிலே, நருக்காமருந்திருக்கின்றதே நாராயணாநாராயணா.

இ-ள். வெயிலிலே சுருங்காதது, உடலிலே யூறினுற் சுழற்ருதது, அக்கினியிலே யுருகாதது, உண்டையாக வுருட்டிஉலர்த்தாதது, உழக்கெண் ணெயிலே கருக்காதது, வலிய கைகளிலே கசக்கா தது, இரண்டு கல்லிலே நெருக்காதது, இத்தன் மையைக் கொண்ட மருந்தானது இருக்கின்றது. அது யாதெனில்; அஷ்டாட்சரமே யன்றி வேறில்லை ஸ்ரீமந் நாராயணு எ-று. 15

தகவாயுனைப் புகழாமலே சலமேதொடுத் திகல்பேசுவார், மூகவாயிலே புழுவீழுமே மூனை யந்தகன் கிளைமோதுமே, ககவாகனு மிகுமோகனு கனகன்களே பரமார்பெலாம், நகவாளினு லரிசிய மே நாராயணு நாராயணு.

இ-ள். மேன்மையாகத் தேவரீரைத் தோத் திரஞ்செய்யாமல் கோபமேபொருந்திப் பகையாக இழிவுபேசுவாருடைய மூகத்தோடுங்கூடிய வாய் களிலே புழுக்கள் சொரிவதுமல்லாமல் எதிர்க்கா நின்றயமனுதர்மோதுவார்கள். கருடவாகனனே! மோகசொரூபனே! இரணியனுடைய மார்பையும் திவனூது சேனைகளையும் நகமெனனும் ஆயுத நனுலே சங்கரியாநின்ற நரசிங்கரூபமாகிய ஸ்ரீமந் நாராயணு எ-று. 16

தலமேழையும்படமோதினுஞ் சலமோவிடா தகிலாண்டநற், பலம்யாவுமென் மனைசேரினும் பசைபோதிடா திசைமாதரார், குலம்யாவுமின் பமதீயினுங் குறுகாதுமால் பெறுகார்யமே, நலமே வுமோ பொலமேவுமோ நாராயணு நாராயணு.

இ-ள். ஏழுலோகத்தையும் அழியும்படியாய்ப் போர் பண்ணினாலும் கோபங்களடங்குவதில்லை, அகிலாண்டங்களிலே யிராநின்ற நன்மையான பாக்கியங்களெல்லாம் என்வீட்டிலே நிறைந்தாலும் ஆசைகளொழிவதில்லை, பெண்களென்றிசைந்த சாதிகளெல்லாம் இன்பத்தைக் கொடுத்தாலும் காமங்கள் நீங்குவதில்லை. இத்தன்மையைக்கொண்ட என்னுடைய தேகமானது எந்தத் தன்மையைப்பெறுமோ அறியகில்லேன் பிரகாசியாநின்ற மேகவண்ணனாகிய ஸ்ரீமந நாராயணா எ-று. 17

பண்டிட்டதா மரையுந்தியிற் படிவார்நினக் கடியாரெனத், தொண்டிட்டுநின் றொழில்கொள்வதோ துயரத்திலே யடைவிப்பதோ, கொண்டிட்டநின் புகழ்நிற்கவே குறையாளரைப் புகழ்கின்ற வாய், நண்டிட்டபாழ் வளையொக்குமே நாராயணா நாராயணா.

இ-ள். பழமையாயிராநின்ற தேவரீருடைய நாபிக்கமலத்திலே பொருந்தின உயிர்களையெல்லாம் அன்பராகும்படி அடிமைகொண்டு கைங்கரியத்தைக் கொள்ளவேண்டுமேயல்லாமல் துக்கங்களடையச் செய்யலாமோ, வேதங்கள் கொண்டிராநின்ற உம்முடைய கீர்த்தியைவிட்டுக் குறைச்சலான தெய்வங்களைப் புகழாநின்ற வாய்களெல்லாம் நண்டிட்டுத் தோண்டிவிட்ட பாழ்வளைக்கு ஒப்பாவதேயன்றிப் பிரயோசனமில்லை ஸ்ரீமந் நாராயணா எ-று. 18

பகையானவன் பிணிசெய்ததோர் பதிஞயி ரம்பிழையுண்டுநான், வகையாநினக் குரைசெய்கி லேன் வருநோயுநின் னருளாதலால், மிகையான பின் முறையிட்டனன் விடுவித்திடாய் விளையாடி ஞல், நகையார்களோ குறையார்களோ நாராயணு நாராயணு.

இ-ள். அடியேனுடைய தேகத்திலே பகை யாகிய பொல்லாத பிணியானது செய்யாநின்ற உபத்திரவங்கள்பதிஞயிரமுண்டு. அதனை இன்ன விதங்களென்று தேவரீருக்கு விண்ணப்பஞ் செய் கிலேன். வராநின்ற இந்த நோயானது உமது கிருபையேயல்லாமல் வேறில்லை. ஆதலால் துன் பம் மிகுந்தபிற்பாடு முறையமிட்டேன். இதை நீக்கிவிடாமல விளையாடிஞல் உலகத்தார் நகைப் பதுமல்லாமல் இகழ்ச்சியும் பண்ணுவார்கள் ஸ்ரீமந் நாராயணு எ-று. 19

குப்புற்றகன் றுடஞகெலாங் குழுவாகவோர் குழலூதவே, மப்புக்கொளுந் தொனிகாதிலவ் வழியேகுபுட் களுநூண்ணவே, துப்புக்குமோர் தயிர்வெண்ணெய்பால் சொரிகைக்குமவ் விடை நங்கைமார், நட்புக்குமா டியகண்ணனே நாரா யணு நாராயணு.

இ-ள். துள்ளின கன்றுகளுடனே பசுக்க ளெல்லாங் குவிந்திருக்கவும், ஆகாயவழியிலே செல்லாநின்ற பட்சிகளுடைய காதுகளிலேகேட் கவும், ஒப்பில்லாத வேணுகுழலூதித் தொனி யாக மப்புக்கொட்டினதுமல்லாமல் அங்கிருக்கும் இடைப்பெண்கள் பொழியாநின்ற நெய்க்கும்

மோருக்கும் தயிருக்கும் வெண்ணெய்க்கும் பாலுக்கும் அவர்களுடைய நட்பினுக்கும் நடனஞ் செய்த கண்ணனாகிய ஸ்ரீமந் நாராயணா எ-று. 20

தாயற்றபேர் தாயாகுவாய் தமரற்றபேர் தமராகுவாய், சேயற்றபேர் சேயாகுவாய் செயலற்றபேர் செயலாகுவாய், வாயற்றபேர் வாயாகுவாய் மலைபோலுநோய்க் குனை நம்பினால், நாயிற்று முன் பனிநிற்குமோ நாராயணா நாராயணா.

இ-ள். தாயில்லாதபேர்களுக்குத் தாயாகவும், சுற்றமில்லாதபேர்களுக்குச் சுற்றமாகவும், பிள்ளையில்லாதபேர்களுக்குப் பிள்ளையாகவும், உதவியில்லாதபேர்களுக்கு உதவியாகவும், வாக்கில்லாதபேர்களுக்கு வாக்காகவும், அருளாநின்ற தேவரீரை அடியேன் மலைபோலுங் கொண்ட நோய் தீருதற்கு நம்பினால் சூரியன்முன்னே பனி நீங்குமாப்போலே நீங்குமேயன்றி நிற்குமோ? ஸ்ரீமந் நாராயணா எ-று. 21

மந்தன்புதன் குருவெள்ளிசேய் மதிராகுகே தரிநாடொறுந், தந்தம்பொலா விடமேவினுஞ் சகலேசநின் சரணண்டினால், எநதம்பிரா னிவனென்றுகொண் டேகாதசப்பலனீவரே, நந்தன் சுதா நம்புயபதா நாராயணா நாராயணா.

இ-ள். சனி புதன் குரு சுக்கிரன் செவ்வாய் சந்திரன் ராகு கேது சூரியன் இவர்கள் நாடோறும் தங்கள் தங்கள் பொல்லாத இராசிகளிலேயிருந்தாலும், சகலத்துக்கும் ஈசனே! தேவரீருடைய திருவடியை யடைந்தால் எங்களுடைய

தம்பிரான் இவனேயென்று அன்புகொண்டு பதி ஞேராமிடத்துப் பலனைக் கொடுப்பார்கள். நந்த கோபனுடைய திருக்குமாரா! நாயினேன் நம்பா நின்ற பரமபதத்தை யுடைத்தாகிய ஸ்ரீமந் நாரா யணு எ-று. 22

ஆற்ருமையொன் றமையாமையொன் றறி யாமையொன் றருளாமை யொன, றேற்ருமை யொன் றிசையாமையொன் றிணுமையொன் றிருதாளேயும், போற்ருமையொன் றடியாருடன் பொலியாமையொன் ஞெருமெய்யிலே, நாற்ருய் விளைந் திடலாகுமோ நாராயணு நாராயணு.

இ-ள். அயலார் வாழ்வைக்கண்டு அவதிப் படுதல், பொறுமை நீங்குதல், பேதைமை வளர்த் தல், ஈதன்மறுத்தல், மூயற்சியடைதல், இங்கிதம் ஒழித்தல், பொருமை மிகுதல், திருவடிப் புகழ் விடுதல், அடியாருடன் கூடாதிருததல் இவைக ளெல்லாம் நாயினேனுடைய ஒரு தேகத்துக் குள்ளே நாற்றுக்கள்போல வளரலாமோ? ஸ்ரீமந் நாராயணு எ-று. 23

தன்மைக்குநீ யடியேனுடைச் சலிகைக்குநீ பொலிகைக்குநீ, மேன்மைக்குநீ வன்மைக்குநீ மிகுதிக்குநீ தகுதிக்குநீ, புன்மைக்குநீ புலமைக் குநீ பொறுமைக்குநீமறுமைக்குநீ, நன்மைக்குநீ தின்மைக்குநீ நாராயணு நாராயணு.

இ-ள். அடியேனுடைய ஒழுக்கத்துக்கும் சலிகைக்கும் பிரகாசத்துக்கும் மெலிமைக்கும் வலி மைக்கும் குற்றத்திற்கும் மூயற்சிக்கும் பொல்லாங்

குக்கும் அறிவுக்கும் பொறுமைக்கும் மோட்சத்துக்கும் நன்மைக்கும் தின்மைக்குஞ் சகலத்துக்குந் தேவரீரேயல்லாமல் வேறில்லை ஸ்ரீமந் நாராயணு எ-று. 24

வேட்பித்ததுன் பெருநெஞ்சமே வியப்பித்ததுன் விளையாடலே, கேட்பித்ததுன் பலநூல்களே கிளர்ப்பித்ததுன் பதிவாசமே, பேட்பித்ததுன் கனசத்தியே பிழைப்பித்தவெம் பிணிப்பித்த வாழ், நாட்பிச்சையுந் தரவேண்டுமே நாராயணு நாராயணு.

இ-ள். உமது திருவுள்ளமே எனக்கு இன்பம் தந்தது, உமது திருவிளையாடலே எனக்குச் சந்தோஷஞ் செய்வித்தது, உமது திவ்வியப் பிரபந்தமுதலாகிய புராணங்களே எனக்குக் கேட்கப் பண்ணியது, உமது திருப்பதிகளே எனக்கு வாசத்தை யுண்டாக்கியது, உமது கனம்பொருந்திய வலிமையே எனக்கு ஆதரவுபுரிந்தது. ஆதலால் அடியேனுடைய குற்றத்தையும் வெவ்விதாகிய நோயையும் நீக்கிவிட்டு இனி வாழ்நாளாகிய பிச்சையுந் தரவேண்டும் ஸ்ரீமந் நாராயணு எ-று. 25

பூரிக்குநின் கொடியென்னவே புளகிக்குநின் சனமென்னவே, ஈரிக்குநின் சபையென்னவே யிரதிக்குநின் புகழென்னவே, ஆரிக்குணம்பெறு தேவர்தா மடியாருளந் தானந்தமே, நாரிக்குவில் லொடியச்செய்தாய் நாராயணு நாராயணு.

இ-ள். உமது கருடக்கொடியே யென்றால் எனது தேகம் பூரிக்கும், உமது அடியார்களே

யென்றால் எனது மயிர் புளகிக்கும், உமது சபை யேயென்றால் எனது கண்களிலே ஆனந்தபாஷ் பம்பெருகும், உமது புகழேயென்றால் என்மனது ரம்மிக்கும். ஆகலால் இத்தன்மையான குணத் தைத் தேவர்களிலே எவர்கள்தான் பெற்றார்கள். பாகவதருடைய இருதயத்தில் ஆனந்தமான வனே! ஜானகிக்காக உருத்திரன் வில்லை ஒடியச் செய்தருளாநின்ற ஸ்ரீமந் நாராயணா எ-று. 26

தேன்பாடிதா வனமாலையுந் திருவாழிசங் கமுமேந்தியே, தாண்பாடிநா ரதனுடுமன் சபை மானிடர்க் கதிதூரமே, வான்பாடியுட் புயலென் றுதான் வருமென்றுவா டுவதென்னவே, நான் பாடினால் வரவேண்டுமே நாராயணா நாராயணா.

இ-ள். நாரதமுனியானவர் பாடியாடாநின்ற தேவரீருடைய சபையானது மானிடர்களுக்கு அதிகதூரமாகவிருக்கும். ஆதலாலவாக்கூடாது. வானம்பாடியென்னும் பட்சியானது நீருண்ட மேகங்கள் என்றைக்கு வருமோவென்று மனது வாட்டங்கொள்வதுபோல அடியேன் வருந்திப் பாடினால் அத்தன்மைபோல வந்து இரட்சித் தருளவேண்டும் வண்டு பாடித் தாவாநின்ற துளபமாலையும் திருச்சக்கரமும் சங்கமும் ஏந்திய ஸ்ரீமந் நாராயணா எ-று. 27

மானேயுநின னருளுற்றநாள் வாய்நீர்மருந் தாயங்கனே, தானேடுநின் னருளற்றநாள் சஞ் சீவியைத்தளியேறுமே, தானேனையண் டினபேர் கடா ரடியாருளத தானந்தமே, நானேதவா ஞானேதயா நாராயணா நாராயணா.

இ-ள். மகத்தாகிய நோய்களெல்லாந் தேவரீருடைய கிருபையைப் பெற்ற நாளையிலே உமிழ் நீரே மருந்தாகி அங்ஙனே ஓடிப்போகும். உமது கருணை யில்லாத காலத்திலே சஞ்சீவியைக் கொடுத்தாலுந் தள்ளிவிட்டு அதிகமாகுமாதலால் இதை யறிந்தபேர்கள் சுகத்தைப் பெறுவார்கள். அடியார்கள் இருதயத்தில் ஆனந்தமானவனே! நாயினேன் ஸ்தோத்திரம் பண்ணினால் ஞான உதயஞ் செய்தருளவேண்டும் ஸ்ரீமந்நாராயணா எ-று.

ஈசன்பரன் பிரமன்பிதா விறைவிண்டுவண்டுறைதண்டுழாய், வாசனசரா சரனென்றுநின் வழியன்பர்வாழ் பதிதன்னிலே, தீசங்கடம் பிணிதாழுமே சிறைசண்டைவஞ் சனைவீழுமே, நாசங்கடந் துயர்வீழுமே நாராயணா நாராயணா.

இ-ள். ருத்திரனுக்குப் பரமனே யென்றும், பிரமனுக்குத் தந்தையேயென்றும், கர்த்தனே யென்றும், விஷ்ணுவே யென்றும், வண்டுகளுடனே குளிர்ச்சி பொருந்தாநின்ற திருத்துழாயினிடத்தில வாசனேயென்றும், சராசரங்களான வனேயென்றும், தேவரீரைத தோத்திரம்பண்ணி வழிபடாநின்ற அடியவர்கள வாழ்ந்தருளுந தலங்களிலே பொல்லாத சங்கடங்களும் நோய் களும் சிறைகளும் போர்களும் வஞ்சனைகளும் இவைமுதல் குற்றங்கள் யாவும நீங்கி மற்றவுமாக வெல்லாம் வாழ்ந்திருக்கும் ஸ்ரீமந நாராயணா எ-று.

ஆபாதவா யுனைவையுமே யடியாருடன் படைபண்ணுமே, மாபாவநூல் பலகற்குமே மறைபனுவாதியர்தம்மினும், ஓபாவியேனிவை

நின்முனேயுரைசெய்தனன்விரைசெய்தபூ, நாபா பரா பரனேயரீ நாராயணு நாராயணு.

இ-ள். அபத்தம் நிறைந்த என்னுடைய வாயானது தேவரீரை வைதுகொண்டேயிருக்கும். அடியார்களுடன் போர்பண்ணிக்கொண்டேயிருக்கும். மகத்தாகிய பாப சாஸ்திரங்களையே கற்கும். ஆதலால் வேதத்திலே சொல்லாநின்ற விரோதிகளைப் பார்க்கிலும் அதிகரித்திராநின்ற விரோதியாகிய நாயினேன் தேவரீர் சந்நிதானத்திலே விண்ணப்பஞ் செய்துவிட்டேன். உமது சித்தம் எனது பாக்கியம். வாசனைசேர்ந்த நாபிக்கமலம் பொருந்தாநின்ற பராபரனென்னும் அரியாகிய ஸ்ரீமந நாராயணு எ-று. 30

காற்பாலினிற் கடவாதவன் கலிகாலமே திரையாடிடுந், தோற்பாவைநா னதுமெச்சவே தொடுசூத்திரத துறைகாரணீ, மேற்பாவபுண் ணியமானநல் வினைதீவினைக்கெவராகுவார், நாற்பாலினுக்கொருமூலமே நாராயணு நாராயணு

இ-ள். கடலிலே உதித்துவராநின்ற சூரியனாலே அறியுப்படியான காலப்பிரமாணத்தோடுங் கூடிய கலிகாலமே திரையாகவும், ஆடாநின்ற தோற்பதுமை யானுகவும, மனது மெச்சும்படியாகத் தொடுக்காநின்ற சூஸ்திரத்துறைக்காரர் தேவரீரானால் மேலே வாராநின்ற பாப புண்ணியங்களுக்கு அதிகாரிகள் எவராகுவார்கள்? இந்த நியாயத்தைத் தெரியப்படுத்தவேண்டும். பறப்பன ஊர்வன நடப்பன இருப்பனவாகிய நான்குவித

சாதிகளுக்கெல்லாஞ் சமானமான ஆதரவு தேவ ரீரேயன்றி வேறில்லை ஸ்ரீமந் நாராயணா எ-று. 31

இரையாலெழுஞ் சுவரானநா லிருசாணுடம் பிடியாமலே, கரையாமலேதகராமலே கழலாமலே யழலாமலே, திரையாமலே வினைமூடி கண் டிறவா மலே வகையென்னைதா, னரையாதசோ றிடுமை யனே நாராயணா நாராயணா.

இ-ள். ஆகாரத்திலே வளரா நின்ற எண்சாணுடம்பாகிய சுவரானது கரைந்துபோகாமலும் இடிந்துபோகாமலும், அதிர்ந்துபோகாமலும், உதிர்ந்து போகாமலும், வெந்து போகாமலும், திரைந்துபோகாமலும், வினையினாலே இறந்து போய் மறுபடியும் பிறந்து விழிதிறவாமலும் இருக்கும்வகை யாதெனில், நரை திரை மூப்பில லாத அமுதத்தைக் கொடுத்தருளவேண்டும் என் ஐயனாகிய ஸ்ரீமந் நாராயணா எ-று. 32

புற்கொண்டுவாழ் பசுவாரெடார் புலியாழ் கிணற்றிடைவீழினுங், கற்கொண்டுவா தடிகொண் டுவா கடிதென்பரப் படுபாவிநான், ஏற்கொண்ட நோய்க்கெவராகுவா ரினிநீயலா திலையெட்டியும், நற்கொண்டலால் வளர்கின்றதே நாராயணா நாராயணா.

இ-ள். புல்லையுண்டுவாழா நின்ற பசுவானது கிணற்றிலேவிழுந்தால் கண்டவர்கள் யாரேனும் எடுத்துவிடுவார்கள். புலியானது விழுந்ததானால் சீக்கிரமாய் கற்களுந் தடிகளுங்கொண்டு கொல்லு வார்கள். அத்தன்மைபோலப் படுபாவியான என்

னுடைய தேகத்திலே கொண்ட நோயைத் தீர்க்க எவரிருக்கிறூர்கள்? இனி தேவரீரையன்றி வேறு இல்லை. மழையினுலே எட்டிச்செடியும் வளர்வது போல உம்முடைய கிருபையினுலே அடியேனும் வளரவேண்டும் ஸ்ரீமந் நாராயணு எ-று. 33

அரசன்கையா லபயம்பெரு ரயலாளுமன் னரையண்டினுல், விரசென்றுவந் திடமீவர் நீ வினவாதசீ விகளண்டினுல், வரசங்கரா தியரஞ்சு வார் வருகென்னமேல் வகையென்னதான், நர சிங்கனே முரபங்கனே நாராயணு நாராயணு.

இ-ள். தாங்கள் நம்பியிருக்கும் அரசனுலே பிரயோசன மில்லையென்று மறு மன்னவரிடத் திலே சேர்ந்தால் சந்தோஷித்து எதிரேவந்து இடங்கொடுத்து இரட்சிப்பார்கள். அத்தன்மை யாகத் தேவரீரை நம்பினபேர்கள் யாவரேனும் உம்மை வினவாமல் வெறுத்துப் பக்கத்திலே சென்றுல், முக்கியமான சங்கரன் முதலாகிய தேவதைகளானுலும இரட்சிக்கப் பயப்படுவார் கள். ஆதலால் கதிவேறில்லை. அடியேனை வா வென்றழைக்க வகையென்ன வெண்ணியிருக்கி றீரோ தெரியாது. நரசிங்கரூபனே! முரகாசுரனைக் கொன்ற ஸ்ரீமந நாராயணு எ-று. 34

கோட்சொல்லுவேன் வசைசொல்லுவேன் குறைசொல்லுவேன் முறைசொல்லுவேன், கீட் சொல்லுவேன மிகைசொல்லுவேன் கிலிசொல் லுவேன் வலிசொல்லுவேன், சூட்சொல்லுவே னையனூழிநாள் சொலவேண்டினுஞ் சிறிதுன்னை

102229

யோர், நாட்சொல்லலென் றறிகின்றிலேன் நாராயணா நாராயணா.

இ-ள். பிரமகற்பபரியந்தம் அடியேனுடைய நாவானது கோள்களும் வசைகளும் குறைகளும் மூறைகளும் கீழ்மைகளும் குற்றங்களும் பயங்களும் வலிமைகளும் வஞ்சனைகளும் இவைகளைச சொல்லுமேயன்றிக் கொஞ்சமாகிலும் தேவரீர் நாமத்தை ஒருநாளையிலேனுஞ் சொல்லும்படியாயறிந்ததேயில்லை ஸ்ரீமந் நாராயணா எ-று. 35

ஆளாகிநின் னிருநாலெழுத் தறியாதநாளறிவார்களைக், கேளாதநாள்செவியூறவே கிடையாதநா ளதிலாசையே, மூளாதநா ணிலமீது தான் மூதணரிலங் கெழுதாதநாள், நாளாகுமோ வாளாயுதா நாராயணா நாராயணா.

இ-ள். ஆசாரியனுடைய திருவடிகளுக்கு ஆளாகித் தேவரீருடைய திருமந்திரத்தை அறியாதநாளும், தெரிந்த பாகவதரைக் கேளாதநாளும், செவிகளிலே யூறும்படியாய்க் கிடையாதநாளும், அதிலே ஆசையானது பெருகாதநாளும், அஞ்சாவது வயதில் முதல்நாளையிலே பள்ளிக்கூடத்தில் அரியென்று நிலவெழுத்தாகிலும் எழுதிவையாதநாளும் பல நல்ல நாளாகுமோ? வாளாயுதத்தையுடைய ஸ்ரீமந் நாராயணா எ-று. 36

வீட்டுக்குளே துணையாவதும் வெளியிற்குளே துணையாவதும், கூட்டுக்குளே துணையாவதுங் குன்றுக்குளே துணையாவதும், காட்டுக்குளே துணையாவதும் கடலுக்குளே துணையாவ

16NTI,N

தும், நாட்டுக்குளே துணையாவதும் நாராயணு நாராயணு.

இ-ள். வீட்டினுக்குள்ளே துணையா யிருப்பவனும், வெளியினுக்குள்ளே துணையாயிருப்பவனும், சந்திரனுக்குள்ளே துணையாயிருப்பவனும், மலையினுக்குள்ளே துணையாயிருப்பவனும், காட்டினுக்குள்ளே துணையா யிருப்பவனும், கடலினுக்குள்ளே துணையா யிருப்பவனும், நாட்டினுக்குள்ளே துணையா யிருப்பவனும் நீயேயன்றி வேறில்லை ஸ்ரீமந் நாராயணு எ-று. 37

வாய்க்கின்றதேன் பகையுண்ணலா மணக்கின்றசாந் தரையுண்ணலாங், காய்க்கின்றமா வெறியுண்ணலாங் கறக்கின்றவர்க் கட்டுண்ணலாம், தோய்க்கின்றபால் குண்டையுண்ணலாஞ் சுவைகெட்டமா னிடவாலிலா, நாய்க்கிந்தவா தனையேனையா நாராயணு நாராயணு.

இ-ள். தேன்கூண்டினுக்குப் பகைத்தலும், சந்தனக்கட்டையினுக்குத் தேய்த்தலும், பழுத்த மரத்தினுக்குக் கல்லெறிதலும், கறக்கும பசுவினுக்குக் கயிறணைத்தலும், தோய்த்த தயிரினுக்கு மத்தால் குடைத்தலும், இவைகளுக்கு இந்த உபத்திரவமுண்டாகில் பிறருக் குபகாரமாகும். உருசியும வாலுமில்லாத மானிட மென்னும் நாயினுக்கு இந்த வாதனையைக் கொடுத்தீரே இத ஞலே உமக்கென்ன பிரயோசனமுண்டு. தெரியச் சொல்லும் ஸ்ரீமந் நாராயணு எ-று. 38

தும்பிக்கையா னையுமைவர்முன் றுகிலோடி வாடியநங்கையும், தம்பிக்கையா மகயோகருந

தா நிற்கவே சதுர்வேதியன், கம்பிக்கையா லரனுக்கு நீ கனியையிட் டினியையமேன், நம்பிக்கையாகியதெய்வமே நாராயணு நாராயணு.

இ-ள். கஜேந்திரனேயும் பாண்டவரையும் வஸ்திரம் நீங்குதென்று வாடின துரோபதையும் ஸ்தம்பிதமாயிருந்து தவப்பண்ணுநின்றமகத்தாகிய யோகிகளேயும் இரட்சித்திருக்கட்டுப். நாலுகு வேதத்தையுமுடைத்தாகிய பிரமனுடைய சிரத்தைக் கிளளின சிவனுக்கும் பிச்சையிட்டுச் சாபத்தைத் தீர்த்தபிற்பாடும இனி பரதத்துவம் வேறேயென்று ஐயப்படலாமோ? நம்பிக்கையான தெய்வம் நீயேயன்றி வேறில்லே ஸ்ரீமந்நாராயணுஎ-று.

பாலாவதோ, தேனுவதோ பழமாவதோ பாகாவதோ, மேலானசர்க் கரையாவதோ விரையாரு நல் லமுதாவதோ, கோலாகலப் பிணிதீரவே குளியங்களோ வனமூலியோ, நாலாவதோ நின்பேர் சொலாய் நாராயணு நாராயணு.

இ-ள். அடியேனுடையதேகத்திலே மிகாலாகலஞ் செய்யாநின்ற நோயைத் தீர்க்கும்படியான தேவரீருடைய திருநாமமானது பாலாகியதோ? தேனுகியதோ? பழமாகியதோ ? பாகாகியதோ? மேலாகிய சருக்கரையாகியதோ? வாசனே சேர்ந்த நல்லமிர்தமாகியதோ? வனமூலிகை யாகியதோ? இவையல்லாமல் மணிமந்திரம ஔடதம் இவை மூன்றுக்கு மேலாகியதோ? என்னென்று சொல்லுவோம் ஸ்ரீமந நாராயணு எ-று. 40

பூவுக்குநல லதுசொல்லவோ பொலிசீதளப் புதுவாசமே, தேவுக்குநல லதுசொல்லவோ

செவியார்மூனே யெதிர்நிற்பதே, ஆவுக்குநல் லதுசொல்லவோ வதுசாதுவா யமுதீவதே, நாவுக்குநல் லதுசொல்லவோ நாராயணு நாரா யணு.

இ-ள். புட்பங்களுக்குள்ளே நல்லது சொல் லவேண்டுமானல் காந்தியும் குளிர்ச்சியும் புதிய வாசனையும் உண்டாகியபுட்பமேயன்றிவேறில்லை. தெய்வங்களுக்குள்ளே நல்லது சொல்லவேணடு மானல் முறையத்தைக் காதிலே கேட்குமுன் னமே அடியார்களுக்குப் பிரசன்னமாகிய தெய்வ மேயன்றி வேறில்லை. பசுக்களுக்குள்ளே நல்லது சொல்லவேண்டுமானல் அது வெகு சாதுவா யமுதத்தைக் கொடுக்கும் பசுவேயன்றி வேறில்லை. நாவுகளுக்குள்ளே நல்லது சொல்லவேண்டு மானல் தேவரீருடைய திருநாமத்தைச் சொல் லிய நாவேயன்றி வேறில்லை ஸ்ரீமந் நாராயணு எ-று. 41

ஆனந்தமா யழுவார்முனே மலர்சூடியே தொழுவார்முனே, மோனந்தனிற் கரைவார் முனே முகிலென்னவே புகழ்வார்முனே, தானந் தவம் புரிவார்முனே சரணென்றுனே யடைவார் முனே, நானென்செய்கே னிவையொன்றிலே நாராயணு நாராயணு.

இ-ள். தேவரீருடைய திருவடியை நினைத்து ஆனந்தபாஷ்பங்களைக் கண்களிலே பெருக்குவார் களுக்குமுன்னே, புட்பங்களை யலங்காரஞ்செய்து தண்டஞ் சமர்ப்பிப்பார்களுக்கு முன்னே, மௌ

னத் தியானத்தினாலே உள்ளங் கரைந்திடுவார்களுக்கு முன்னே, பசுங்கொண்டலே யென்று புகழ்ந்திடுவார்களுக்கு முன்னே, தானங்களுந் தவங்களுஞ் செய்திடுவார்களுக்கு முன்னே, சரணாகதி செய்திடுவார்களுக்கு முன்னே, அடியேன் இவைகளிலே ஒன்றாகிலும் செய்யமாட்டுவேனோ? ஸ்ரீமந் நாராயணா எ-று. 42

செரிக்கின்றவூணுகர்வேனலேன் சிரிக்கின்ற காரியமேசெய்வேன், கரிக்கின்றகண் படையேன் வெறுங் கழப்பன்கொடுங்கடுவஞ்சகன், பரிக்கின்ற நின்னடியாரொடும் பழகேனலேன் படர்வந்த பின், நரிக்கின்றனே னினியென்செய்வே நாராயணா நாராயணா.

இ-ள். ஜீரணமாகும்படியான ஆகாரத்தைக் கொள்ளாமல் நகைக்கும்படியான காரியமேசெய்து தெரிசன அபேட்சையான கணணையும் படையாமல் அன்பைப் பரிக்காநின்ற அடியாருடனேயுங் கூடாமல் விருதாவாகிய கழப்பனாகவும் பொல்லாத விஷம்போலும் வஞ்சகனாகவு மவதரித்துத் துன்பம் வந்தபிற்பாடு, அவதியைக்கொள்ளாநின்ற நாயினேன் இனி என்செய்வேன்? ஸ்ரீமந் நாராயணா எ-று. 43

ஆதாரதே வதையென்பனோ வடியேனையாளரசெனபனோ, ஓதாதுணர்ந்த திடலன்புகூருபதேசதேசிகனென்பனோ, மாதாபிதா வுடலாவிநீ மனைகாணிபொன் வலிசெய்வநீ, நாதாவுநீ தாதாவுநீ நாராயணா நாராயணா.

இ-ள். ஆதாரமாகிய தேவதையே யென்பனோ? அடியேனையாளுங் கர்த்தனேயென்பனோ? பல நூல்களை யோதாமல் தன்னிலே யறிந்திட நட்புசெய்யா நின்ற,உபதேச குருவேயென்பனோ? என்னென்று சொல்வேன்? தாயும் தந்தையும் தேகமும், உயிரும், பெண்சாதியும், காணியும், திரவியமும், வலிமையும், செல்வமும், நாதனும், பிரபுவும் நீயேயன்றி வேறில்லை ஸ்ரீமந் நாராயணா எ-று. 44

வடுநிந்தையே னிடுவந்தியேன் மருள்விஞ்சினே னருளஞ்சினேன், அடுசிந்தையே னெடுவிந்தையே னலைபண்பினே னுனைநம்பினேன், விடுதுன்பினேன் மூடுகன்பிலேன் வினைமண்டினே னுனையண்டினேன், தடுவொன்றிலே மிடைகுன்றுமோ நாராயணா நாராயணா.

இ-ள். குற்றம்பொருந்திய நிந்தையையும், இடுவந்தியையும், மிகுந்த மயக்கத்தையும், அருளில்லாத பொல்லாத இருதயத்தையும், பலவித துர்நடததையையும், காரியமென்கிற அலைச்சலையும, தீவினையையும் இவைகளைக் கொண்டிரா நின்ற நாயினேன் இரக்கத்திலே பயந்தவனாகி, அன்பிலே துரிதமில்லாதவனாகி, துன்பம ஒழிவில்லாமல் தேவரீரை யடைந்தேன். மத்தியிலே இன்னமொரு விதத்தினாலே எனது வருத்தம் நீங்குமோ? ஸ்ரீமந் நாராயணா எ-று. 45

குடிநீர்கொடீர் மூகவேதிடீர் குடவெண்ணையை வடியீர்பிரம், படியீர்வெணீ றெறியீர்விழிக் கதிகோரவஞ் சனமேயிடீர், கடியீர்வயித் தியரால்

வரா கமதாடுகுச் குடமிட்டுளே, நடியீரெனிற் பிணியஞ்சுமோ நாராயணா நாராயணா.

இ-ள். குடிக்கும்படியாய் கிஷாயங்கள் நீர் கொடுங்களென்றும், மூகத்துக்கு வேதுபிடியுங்களென்றும், குடத்திலே எண்ணெயை காய்ச்சிக் கொடுங்களென்றும், பிரம்புகொண்டு அடித்து வெளுத்த விபூதியை எறியுங்களென்றும், கண்களுக்கு அதிகோரமாகிய கலிக்கம்போடுங்களென்றும், வயித்தியருக்குக்காட்டித் தீருங்களென்றும், பன்றியும் ஆடும் கோழியும் பலிகொடுத்துச் சன்னகமாட்டிப் பாருங்களென்றுஞ் சொல்லினால் இவைகளாலே நோய் தீர்வதுண்டோ? ஸ்ரீமந் நாராயணா எ-று. 46

பிரம்புக்குமுள் ளிடுமாதரைம் பிணிகட்குநீள் பிணியுற்றவென், உரம்புக்குளே யறியாததெனுலகத்தெலாமுறைசோதிதோல், வரம்புக்குளே யெலும்புக்குளே வழும்புக்குளே தழும்புக்குளே, நரம்புக்குளே யுகவெட்கியோ நாராயணா நாராயணா.

இ-ள். முள்ளுகளோடுங்கூடிய பிரப்பம்புதருகளுக்குந் தாமரைப் பிணையல்களுக்கும் மிகுந்த நோய்கொண்டிராநின்ற என்னுடைய நெஞ்சுக்குள்ளே நீ நுழைந்தறியாமலிருப்பதென்னே? உலகத்திலிருக்கும் எல்லா வுயிர்கள்தோறும் வாசப்பண்ணுநின்ற சோதி நீயன்றி வேறில்லை. ஆதலால் இது தோலுடப்பும் எலும்பும் வழும்பும தழும்பும் நரம்பும்கூடி நாற்றமானபடியி

ணாலே புகுந்தறிதலுக்கு வெட்கமாகியதோ? ஸ்ரீமந் நாராயணா எ-று. 47

மன்றாடிய வதிசோபன மழைவண்ணனே விசயங்கரா, வென்றாய்சயஞ் செயுமச்சுதா மிக வாழிகே சவனேசுபங், கன்றால்விள வெறிந்காய் பெருங் கலியாணமங் கலமாதவா, நன்றாகவேங் கடநாயகா நாராயணா நாராயணா.

இ-ள். கோபிகாஸ்திரீகளுடைய சபையிலே நடனம்பண்ணா நின்றவனே! உனக்கு அதிக சோபனம், மேகவண்ணனே! உனக்கு விசயம். முதலையை வென்றவனே! உனக்கு செயம். அச்சு தனே! உனக்கு மிகுந்த வாழி கேசவனே! உனக் குச் சுபம். கன்றால் விளாங்கனி யெறிந்தவனே! எனக்குப் பெரிதாகிய கலியாண மாதவனே! உன க்கு மங்களம். வேங்கடநாயகா! நீ இத்தன்மை யாக நன்றாயிருக்கவேண்டும் ஸ்ரீமந் நாராயணா எ-று. 48

இந்தாவெனாவெனதிச்சை நீ யெளிநீவையே லிழிவாகுமோ, சந்தானமா மலராலருச் சனை செய்குவார் தவிர்வார்களோ, வந்தானபேர் துதி யார்களோ வசுதேவர்சீர்குறையாகுமோ, நந்தாத பெண் ணைசெய்வளோ நாராயணா நாராயணா.

இ-ள். அடியேனுடைய இச்சையானபடியே இங்கே வாவென்று தேவரீர் எளிதாகப் பலனைக் கொடுத்தருளினால் உமக்கு இகழச்சியாகுமோ? கற்பக மலரினாலே அருச்சனை செய்யாநின்ற தேவர்கள் விட்டுவிடுவார்களோ? சந்நிதானத்

தில் வந்தபேர்கள் தூதியார்களோ? வசுதேவரு டைய உடைமையிலேகுறைந்துபோகுமோ? அழி வில்லாத ஸ்ரீமகா லட்சுமி நகைப்பாளோ? சொல் லும் ஸ்ரீமந் நாராயணா எ-று. 49

சிற்றப்பனோ துருவற்குநீ தெதிபாண்டனார் பெரியப்பனோ, கற்றத்தைதேவகிதங்கையோ கண் டாகனன் மிதிலேசனோ, சுற்றத்தரோ பெறுவோ ரெலாந் தொடுவேன்வழக் கிடுவேன்விடேன், நற்றப்படும் பொருடந்துபோ நாராயணா நாரா யணா.

இ-ள். தேவரீர் முன்னாளையிலே இரட்சித்த பேர்களுக்குள்ளே துருவமகாராஜனுக்கு நீசிற் றப்பனோ? தெதிபாண்டனென்னுங்குயவன் உமக் குப் பெரியப்பனோ? கல்லுருவம் போக்கிக் கிளி போலப் பேசப்பண்ணநின்ற அகலிகையானவள் தேவகிக்குத்தங்கையாகிய உமதுசிறியதாயாரோ? கண்டாகனனென்னும் விரோதியானவன் உமக் குப் பெண்கொடுத்த மிதிலேச் சனகமகாராசனாகிய அம்மானோ? இன்னம் பேறுபெற்ற பேர்களும் பெறும்பேறுகளும் உமக்கு உறவின்முறையார் களோ? ஆதலால் சம்பந்தமில்லாத பேரையெல் லாம் இரட்சித்தபடியினாலே தேவரீருக்கும் அடி யேனுக்கும் வழக்கு விடுவதில்லை. ஆசைப்பட்ட பலனைக்கொடுத்து அப்புறம் போகவேண்டுமே யன்றிப் போகக்கூடாது ஸ்ரீமந் நாராயணா எ-று.

தன்னெட்டெழுத் தயனமத்தகந் தனிலே பொறித் தடிநாவிலே, உன்னெட்டெழுத்தெழு

தாமையா லுலகத்துளோ ரவனைத்தொழார், கன்னெட்டிடத் தருநெட்டிடக் கனனெட்டிடக் கனகாலிபின், நன்னெட்டெலாந் தொடர்பாதனே நாராயணா நாராயணா.

இ-ள். பிரமதேவனானவன் உலகத்திலேயுள்ள மானிடர்களுடைய தலைகளிலே தனது நெட்டெழுத்தைமாத்திரம் எழுதி அடிநாவுகளிலே தேவரீருடைய அஷ்டாட்சரத்தை எழுதாமற் போனபடியினாலே அவனை ஒருவருந்தேடுகிறதேயில்லை. முல்லை நிலத்திலே கல்லுகள் நெட்டிடவும், விருட்சங்கள் நெட்டிடவும், அக்கினிகள் நெட்டிடவும், விஸ்தாரமாகிய பசுக்கள்பின்னாலே நன்மைபெற நெடிதான தூரமெல்லாம் நடந்தருளாநின்ற திருவடியை யுடைத்தாகிய ஸ்ரீமந் நாராயணா எ-று. 51

உரலுக்குமோ ருறுபஞ்சமோ வுனை நச்சினேனெனையச்சமன், விரலிட்டுதேர் வினைவல்லனோ விதிகைக்குளவ் விரலோசையால், பொரலுற்றநோய் கழலப்பணிப் புதிதாமருந் தொருதூதனால், நாலைக்குளாய் வரவேண்டுபோ நாராயணா நாராயணா.

இ-ள். குத்தாநின்ற உரலினுக்கு ஒருகாலத்திலேயும் தரித்திரம் வருவதில்லை. அத்தன்மைபோலத் தேவரீரிடத்திலே நிரம்பிய ஐசுவரியமேயன்றி இல்லாததில்லையே. ஆதலால் உம்மிடத்திலே இச்சைகொண்டேன். இனி என்னை அந்தயமனானவன் விரல் விட்டுக்காட்டி யறிந்து வினை

செய்யமாட்டுவனோ? பிரமாவினுடைய கைகளிலே யிராநின்ற விரலும் என்றலையிலே எழுத அசைய மாட்டாது. வருத்தத்தைச் செய்யாநின்ற என் நோய் தீரும்படியாய்ச் செய்வதற்குப் புதிதாய் ஒப்பில்லாத சஞ்சீவியானது ஸ்ரீ அனுமாராலே வரவேண்டுமோ? க்ஷீராப்தி வாசனாகிய ஸ்ரீமந் நாராயணா எ-று. 52

சமையாதிதேவதையென்பதுஞ் சமையாதி நின் பெயரென்பதும், உமையாளுடன் பரமன் பரிந்துனைமாமறைப் பொருளென்பதும், தமை யாள்வதென் றிமையோர்திலோத் தமையாதிபன் புகழ்கின்றதும், நமையாமலே யெனையாளுவாய் நாராயணா நாராயணா.

இ-ள். சமயங்களுக்கெல்லாம் அதிதேவதை நீயேயென்றும், எச்சமயத்துக்கும் உரியது உம் முடைய பெயரேயென்றும, மகத்தாகிய வேதப் பொருள் நீயேயென்று உமையவளுக்குச் சிவன் பரிந்து நிச்சயம்பண்ணினதும், தேவதைகளுக் கும் திலோர்த்தமைக்கும் அதிபனாகிய தேவேந் திரன் தங்களை இரட்சிக்குங் கர்த்தனே யென்று புகழ்கின்றதுங் கெடாமற்படி என்னை இரட்சித் தருளவேண்டும் ஸ்ரீமந் நாராயணா எ-று. 53

நீயண்டரா லடிபட்டநா ணினைவில்லை நின் னுதரத்துளே, போயண்டகோ டியிலெநதலூர் புரையிற்குளே விளையாடினேன், யாயங்சடந் தறி வேனெனில் வரதன்கெடீர் வானோர்க்கெலாம், நாயன்கெடீர் விடுமென்பனே நாராயணா நாரா யணா.

இ-ள். தேவரீர் அசோதைமுதலாகிய இடையராலே அடிபட்ட நாளையிலே அடியேனுக்கு நினைவில்லாமற்போயது. அது எதனாலேயென்றால், உமது குட்சிக்குள்ளே இராநின்ற அண்டகோடிகளிலே எந்தசந்துகளுக்குள்ளேயோ விளையாடினேன். நீர் செய்யும் மாயம் நீங்கி யறிந்தேனேயானால் தேவதைகளுக் கெல்லாம் உம்மை வரதனென்றும், நாயகனென்றும். அந்த இடையர்களுக்குத் தெரியப்படச்சொல்லிக் கெடுவீர்கள். விட்டுவிடுங்கோளென்று நீக்கிவிடுவேன். திருமேனி என்னவிதமாக நொந்ததோ? இப்போது பெரியோர்களாலே யறிந்தேன்- அறிந்துஞ் சமயத்திலே உதவாதே போனேன். இனி வருந்தி என்ன பிரயோசனம்? ஸ்ரீமந் நாராயணா எ-று. 54

காசிக்குளுங் கயையிற்குளுங் கழியாதபா தகனாகையால், கூசிக்குலைந் துனைவந்தியேன் குறையாகுமோ வினையென்பதோர், வாசிக்குவந் தருள் செய்குவாய்வயிரத்திராவணன்றங்கைகதன், நாசிக்குவா ளெறியையனே நாராயணா நாராயணா.

இ-ள். காசியினிடத்திலேயும் கயாவினிடத்திலேயும் வாசமபண்ணினாலும் நீங்காத பாவியானபடியினாலே மனது கூசிக் கலைந்து தேவரீரைத் தோத்திரம் பண்ணாமல் விட்டுவிட்டேன். அதினாலே உமக்குக் குறைவாகுமோ? அடியேனுடைய வினையென்னும் வாசி தீரும்படியாய்வந்து கிருபை செய்தருளவேண்டும். முன்னாளிலே வயிரத்தோடுங் கூடிய இராவணன் தங்கையாகிய

சூர்ப்பனகையினது மூக்கறும்படியாய்ச் செய்த வாளாயுதத்தையுடைய ஸ்ரீமந்நாராயணா எ-று. 55

தாளுக்கவா வியநாவினுஞ் சலியாதுவா சனி யானநோய், ஆளைக்கெடா தின்றைக்குவா வசை யாமலே யன்றைக்குவா, தோளுக்குவா ளியை யெய்தவன் துயர்கண்டிரா வணனின்றுபோய், நாளைக்குவா •வெனுமையனே நாராயணா நாரா யணா.

இ-ள். தேவரீருடைய திருவடிகளுக்கு ஆசை கொள்ளாநின்ற எனது நெஞ்சிலேயும் நாவிலே யும் வருத்தமில்லாமல் வரவேண்டும். சனியான நோயானது அடிமையைக் கெடுததுவிடாமல் இன்றைக்கே வரவேண்டும். சரமதிசையிலே யம னைக்கண்டு சஞ்சலிக்குமுன்னமே அன்றைக்கு வரவேண்டும். முன்னாளையில்பாணங்களைத்தோள களிலே யழுந்தும்படியாய் எய்து அவனது துய ரத்தைக்கண்டு, வயிரத்தையுடைய இராவணா! நீ இனறைக்குச் சென்று நாளைக்கு வாவென்று கிருபைபண்ணாநின்ற என்னையனாகிய ஸ்ரீமந்நாரா யணா எ-று. 56

விக்கற்கிடம் பொருமற்கிடம் விடுமூச்சுமே லெழுதற்கிடம், கக்கற்கிட மிருமற்கிடங் கருதற் கிடந்திருகற்கிடம், சொக்கற்கிடங்குளிர்தற்கிடஞ் சுடுதற்கிடம் வெருவற்கிடம், நக்கற்கிடந் தரு மெய்யருள் நாராயணா நாராயணா.

இ-ள். விக்கலென்றும், பொருமலென்றும், மேல்மூச்சென்றும், கக்கலென்றும், இருமலென்

றும், கருகலென்றும், திருகலென்றும், சொக்குத லென்றும், குளிர்தலென்றும், சுடுதலென்றும், பயப்படுதலென்றும், நக்கலென்றும் சொல்லா நின்ற அந்தப் பீடைகளுக்கெல்லாம் இடங் கொடுத்திரா நின்ற தேகத்தையுடைத்தாகிய அடி யேனை இரட்சித்தருளவேண்டும் ஸ்ரீமந் நாரா யணா எ-று. 57

துளசீதளத் துளசீதளத் தூய்நீரதே குடிநீ ரதாம், உளதாயிரம் பெயரெண்ணுநூற் றொரு கோடிமந் திரமேலதாம், வளமார்பின்மா மணி யென்னவே மணியாமெனைப் பிணியென்செயும், நளகூபரன்பகைவென்றவா நாராயணா நாராயணா.

இ-ள். திருத்துழாயினது தளங்களிலே பொருந்துங் குளிர்நத நீரே குடிக்குங் கிஷாயங் களுக்கெல்லாம்மேலாகிய கிஷாய நீராகவும், நிலை பெற்றிரா நின்ற ஆயிரந் திருநாமங்களும் நூற் றொருகோடி மந்திரங்களுக்கு மேலாகிய மந்திர மாகவும், வளம் பொருந்தா நின்ற திருமார்பிலே யிருக்குங் கவுஸ்துவமணியே மணிகளுக்கெல் லாம் மேலாகிய மணியாகவும் இருக்கின்றன. ஆராயுமிடத்தில் இதுவே மணிமநதிர அவுஷத மாகவிருக்கப் பிணியானது அடியேனை என்ன செய்யும்? நளகூபரனுடைய சாபத்தைத் தீர்த் தருளிய ஸ்ரீமந் நாராயணா எ-று. 58

சுவையோசையூ றொளிமாமணந் தொடரா மனஞ் சுழல்கெண்டையும், கவைமானுமானையும் விட்டிலுங் களிவண்டுமே விளிகின்றபோல்,

இவைதூயவென் றிவைதீயவென் றினியுண் டிலே னினியென்செய்வேன், நவைதீரவேயருள் செய்குவாய் நாராயணா நாராயணா.

இ-ள். ஆகார வுருசையினாலே கெண்டையும், மணியோசையினாலே கிளைமானும், தேகப் பரிசத்தினால் யானையும், தீபப் பிரகாசத்தினாலே விட்டிற்பூச்சியும், வாசனையினாலே மதர்த்த வண்டும், இவை ஐந்தும் மனந் தொடர்ந்து சுழன்று விழுந்து இறந்துபோவதுபோலே எனது பஞ்ச இந்திரியமும் இது நன்மையென்றும், இதுதீமையென்றும் தெரிந்து புசிப்பதில்லை. இனி யென் செய்வேன்? இந்தக் குற்றந் தீரும்படியாய்க் கிருபைசெய்தருளவேண்டும் ஸ்ரீமந் நாராயணா எ-று

நெட்டேணியின் படியெட்டுமோ நின்னெட் டெழுத் தெழிலண்டமேல், எட்டாமெனும் பதமெட்டவே யிரதித்தசர்க் கரையேயதின், வட்டே பசும் பழமேசதா மதுரித்தவா ரமுதேயெனும், நட்டேயருட் புனல்கட்டுவாய் நாராயணா நாராயணா

இ-ள். மூங்கில்களாலே நெடியதா யமைத்திரா நின்ற ஏணியினதுபடிகளிலே ஏறினால் பரமபதம் எட்டமாட்டாது. ஆதலால் ஏழு அண்டத்துக்குமேல் எட்டாவதாகிய அந்தப் பரமபதத்துக்கு ஏறிவர உபாயமுண்டு. அது யாதெனில், நினது திரு மந்திரமாகிய எட்டெழுத்தையும் எனது நெஞ்சிலே நட்டு, இரம்மியமான சருக்கரையுங் கற்கண்டும் கனிந்த மூப்பழமும் நித்திய

மதுரமாகிய ஆராவமிர்தமும் இவைகளுடைய சுவைபோலே பரவும்படியாகக் கிருபைப்புனல் கட்டினுல் ஏறிவருவேன் ஸ்ரீமந் நாராயணு எ-று. 60

காணுங்கணே குவியுங்கையே கருதுள்ளமே கனலாஞ்சனம், பூணும்புயம் புளகாங்கமே புகழ் நாவதே திகழ்கேள்வியே, ஆணும்பெணுஞ் சரணென்பதே யவையல்லனு ளபராதிகாண், நாணும்பெயர்க் காதாரமே நாராயணு நாராயணு.

இ-ள். தேவரீர் திருவடியைக் காணுநின்ற கண்களுட், குவியாநின்ற கைகளும், நினையாநின்ற உள்ளங்களும், மந்திராக்கினிபொருந்திய சங்கு சக்ர வாஞ்சனம் பூணுநின்ற புஜங்களும், புளகங்கொள்ளாநின்றதேகங்களும், புகழாநின்ற நாவுகளும், கேட்காநின்ற செவிகளும் இவைகள் பொருந்திக் குடும்பத்துடனே சரணுகதி பண்ணுநின்ற அடியார்களைப்போலப் பொருந்தினவன் நானல்லன்; மிகுந்த அபராதத்தை யுடையவன். ஆதலால் தரிசனம்பண்ண வெட்கத்தை யடைந்தேன். இத்தன்மையான வெட்கத்தை யடைந்த பேர்களுக்கெல்லாம் ஆதாரமாகிய ஸ்ரீமந் நாராயணு எ-று. 61

கவிநல்லதோ கவிதீயதோ கனமூடனுன் விதைவித்திடும், புவிநல்லதேல் விளைவெய்துமே புகழ்நல்லதேல் புகர்கேட்கவென், செவிநல்லதே லருணல்லதே செயனல்லதே லியனல்லதே, நவிநல்லதே வரினுவிலே நாராயணு நாராயணு.

இ-ள். மிகுந்த மூடனானவன் பாடாநின்ற கவிதையானது நன்மையாயதோ? தீமையாயதோ? தெரியவராது. விதைக்காநின்ற விதையானது பூமி நல்லதாயிருப்பின் விளையுமேயன்றி விளையா மற்போவதில்லை. ஆதலால் உமது புகழும் கிருபையுஞ்செயலும் இயலும் நல்லதானபடியினாலே அதை என் காதிலே கேட்டு நாவினாலே தோத்திரம் பண்ணினால் நன்மைவருமேயன்றித் துன்பம் வருவதில்லை ஸ்ரீமந் நாராயணா எ-று. 62

பசைகொண்டபா கவதாகமம் பருகாதுகா துருகாதுநெஞ், சசைகொண்டபா தகநீர்லே யமிழ்வேனையா ணவமாதியாய், கசைகொண்டமோ துகைதாக்குமோ களவுள்ளதா னுனதன்பிலேன், நசைகொண்டகா ரியமாகுமோ நாராயணா நாராயணா.

இ-ள். தேவரீரிடத்திலே அன்பு பொருந்தாநின்ற பாகவதாள் சொல்லிய ஆகம சாஸ்திரங்களை எனது காதானது கேட்பதுமில்லை. நெஞ்சானது உருகுவதுமில்லை. அலையாநின்ற பாதகக் கடலிலே விழுந்த என்னைக் காமம்வெகுளி மயக்கமென்கிற பிரமை எடுத்துக்கொண்டு வினையானது மோதி யடிக்கும். திருட்டு மனத்தை யுடைத்தானவனாய் உம்மிடத்திலே பத்தியில்லாமல் பரமபதத்துக்குக் காதல் கொண்டதால் அந்தக் காரியமாகுமோ? ஸ்ரீமந் நாராயணா எ-று. 63

பலகூறுபட் டொருநெஞ்சினன் பரிசென்ன வெங் கணுமானவா, விலகூறுகொண் டெனை

விண்டதென் விரனீக்கிமோர் நுகர்வார்களோ, மலகூறலாய் நீதானுமென் மதிதன்னைவிட் டெனையொத்தனே, நலகூறுவார் சுரதேனுவே நாராயணா நாராயணா.

இ-ள். அடியேன் பலவிதமான இடையூறு பட்ட ஒரு நெஞ்சை யுடையவனானேன். தேவ ரீர் வாய்வு பரிசம்போலே எங்கும் நிறைந்தவ ரானீர். ஆதலால் என்னைமாத்திரம் நீங்குப்படி யான குற்றத்தைத் தேடிவிட்டதென்னோ? விரல் நீக்கி மோரைக் குடிக்கிறபேர்களுமுளரோ? கிரு பையுற்றுப் பெருகிய உண்மையான இருதயத் திலே என்னை மறந்துவிட்டபடியினாலே தேவரீ ரும் அடியேனுஞ் சமானமேயன்றி அதிசயம் இல்லை. நன்மையாகத் தோத்திரம் பண்ணுநின்ற தேவர்களுக்குக் காமதேனுவாகிய ஸ்ரீமந் நாரா யணா எ-று. 64

வாஞ்சித்ததே வதையாகுநீ வடவேங்கடந் தனினிற்கவும், நீஞ்சித்திரிந் தனன்வீணிலே நிழல்கண்டபின் வெயினிற்பரோ, காஞ்சித்தலத் தருளாளனே கனகோபுரக் கொடியாடுமொண், நாஞ்சிற்றிருப் பதிவள்ளலே நாராயணா நாரா யணா.

இ-ள். அடியேனுடைய நெஞ்சிலே ஆசை கொள்ளாநின்ற தெய்வமாகிய தேவரீர் இந்தத் திருவேங்கடத்தில்தானே எழுந்தருளி யிருப்பது தெரியாமல் வீணிலே உலகமெல்லாந் திரிந்து அலைந்தேன். இனி நிழல்கண்டபேர்கள் வெயி லிலே நிற்பதுண்டோ? கனம்பொருந்திய கோபு

ரங்களிலே கொடிகளாடாநின்ற அழகிய மதில்களோடுங் கூடிய காஞ்சித்தலமுதலாகிய நூற்றெட்டுத் திருப்பதிகளிலேயும் அருளாள ரென்றும் வள்ளலென்றும்விளங்கிய ஸ்ரீமந்நாராயணனை-று.

மைநாகமா ழியையண்டிவாழ் வகையென்ன
நின் னருள்வெள்ளலாஞ், சையினுலிருந் ததிலூ
றவே சமைவேனுறத் தருமாறெவன், கையினு
லறிந் திடரண்ணிய கலிதீர நீ யருள்செய்திடும்,
நைனுரிணிற் சரியாவனே நாராயணா நாராயணா.

இ-ள். மைநாகமலையானது சமுத்திரத்திலே மூழுகி வாழுந் தன்மைபோலே தேவரீருடைய கிருபாசமுத்திரத்திலே ஆசையாயிருந்து ஊறும் படியாய்ப்பொருந்தின எனக்கு வரத்தைக்கொடுக்கும்படியானமார்க்கம் எவ்விடத்திலேயோ தெரியவராது. நான் பிரமாவினுடைய சிரத்தைக் கிள்ளிப் பொருந்தாநின்ற தரித்திரம் தீரும்படியாய்த் தேவரீர் கிருபைபண்ணுநின்ற ருத்திரனுக்குச் சமானமாக மாட்டுவேனே? ஸ்ரீமந நாராயணா எ-று. 66

எமக்கென்றுவாழ் குடும்பத்திலே யிழுப்புண்
ணுவாரெமதாதையர், தமக்கொன்றைவைத் தில
ரென்பரே சழக்குள்ளபேர் வழக்குள்ளபேர், சுமக்
கின்றவச் சுமையாளனச் சுதன்மற்றையச் சுமை
கட்கெலாம், நமக்கென்னகா ரியமென்பரே நாரா
யணா நாராயணா.

இ-ள். எமக்கென்று வாழாநின்ற குடும்பத்திலே அவதிப்படும் பேர்களாகிய பாவிகள் நம்மு

டைய அவதி திரும்படியாய் நம்முடைய பிதாக்கள் நமக்கு ஒன்றையும் வையாமற் போனார்களே யென்று அழுவார்கள். இந்தச் சம்சாரமாகிய சுமையைச் சுமக்கா நின்றபுருஷன் அச்சுதனுகை யாலே அந்தச் சுமைகளைத் தாங்க நமக்கென்ன காரியமென்று அறிவுடையோர் சந்தோஷிப்பார் ஸ்ரீமந் நாராயண எ-று. 67

பசுக்கட்குமா யினைபாடியிற் பலபாடியா டியுமாயர்தம், சிசுக்கட்குமாயினைமைந்தனுய்த் திருட்டுக்குமா யினையன்றுதான், மூசுக்கட்குமா யினை நாயினேன் மூசிப்புக்குமா யருள்பூவையே, நசுக்கிப்பின்வா சனைகொள்வரோ நாராயணு நாராயணு.

இ-ள். ஆயர்பாடியிலே யிரா நின்ற பசுக்கூட்டங்களுக்கு இரட்சக கர்த்தாவாகியும், இடைப்பிள்ளைகளுக்குப் பாடலுடனே ஆடல்காட்டியும், சிறுபிள்ளைகளாகி வெண்ணெய் திருடுந் தொழிலுக்கு இசைந்ததுமல்லாமல் முன்னாளையிலே குரங்குகளுக்கு நேசமாகி இரட்சித்த தேவரீர் நாயினேனுடைய தளர்ச்சிக்குக் கிருபை பண்ணமல் புட்பத்தை நசுக்கி மூகர்வாரைப்போல உபேக்ஷைபண்ணலாமோ? ஸ்ரீமந் நாராயண எ-று. 68

குலங்காணவே குடிகாணவே குணங்காணவே பழுதாயினும், பலங்காணுநின னடியாரெனிற் பவசாகரப் பரப்பென்னுளங், கலங்காமலே கலங்காணுமே கழலாமலே கழல்காணுமே, நலங்காமலே நலங்காணுமே நாராயணு நாராயணு.

இ-ள். குலவண்மையும் குலத்தின் நிலைமையும் குணப்பெருமையும் இவைகளைக் காணுமிடத்தில் பழுதாயிருந்தாலும் தேவரீருக்கு அடிமைப் பட்டார்களேயானால் மேன்மை பெறுவார்கள். ஆதலால் பாவ சமுத்திரப் பரப்புக்குள்ளே என்னுடைய நெஞ்சானது கட்டுவிட்டுக் கலங்கி ஒதுங்கி நலங்காமல் நலங்காணும் கப்பலைப் போன்ற திருவடியைக்காணும் ஸ்ரீமந் நாராயணு எ-று. 69

ஈன்றேனு நீ யலனுனுமவ் வியலுந்தியண்டினனல்லனிற், போன்றேனெவன் பெறுபிள்ளையைப் போபோபிதா வினவாதிரான், சான்றோர் முனே யினிநோயைநீ தவிராயெனிற் சபதங் கெடும், நான்றோரைவீ சியவாளனே நாராயணு நாராயணு.

இ-ள். என்னைப்பெற்றவனும் நீயல்லவோ? நானும் அருமையான இயல் பொருந்திய உமது உந்தியிலே யிருந்தவனுமல்லவோ? உம்மைப் போலே இரக்கமில்லார் எவரிருக்கிறார்கள்? போ போ! பிதாவானவன் பெற்ற பிள்ளையை வினவாதிருப்பானே? பெரியோர்கள் முன்பாக என்னுடைய நோயை இனி தீராமற் போனீரானல் உமது சரணுகதி சம்ரட்சணை என்கிறநெறி கெட்டுப்போகும். பகைஞரை வீசிய வாளாயுதத்தையுடைததாகிய ஸ்ரீமந் நாராயணு எ-று. 70

கஞ்சப்பதந் தனையங்ஙனே கட்டிக்கரைந் தவசத்தராய், நெஞ்சத்துநா ரணவென்றுதா னியமித்துநித்திரைகொள்ளுவார், கொஞ்சத்தை

நின் றளவாக்குவாய் குணபத்தைவாழ் குடியாக்கு வாய், நஞ்சத்தையா ரமுதாக்குவாய் நாராயணு நாராயணு.

இ-ள். தேவரீருடைய தாமரைபோலும் திருவடியை உள்ளத்திலே நினைந்து ஞானக் கயிற்றினாலே அங்ஙனே கட்டிக் கரைந்துருகிப் பரவசத்தையடைந்து ஸ்ரீமந் நாராயணனேயென்று நிச்சயம்பண்ணி ஆனந்த நித்திரை கொள்ளுவார்கள். துரும்புபோலே யிருநதாலும் அவர்களை மகாமேருவாகச் செய்தருளுவாய். இதுவுமல்லாமல் புழுக்களை ஐஸ்வரியத்தை யுடைத்தாகிய குடும்பங்களாகவும், விஷத்தை அமிர்தமாகவும் செய்தருளாநின்ற மகிமையை யுடைய ஸ்ரீமந் நாராயணு எ-று. 71

எழுநெட்டிருப் பருமேனிவந் தென்கைக் ககப் படுமென்று நான், தழுவிக்கொளத் திரிகின்றனன் சகலச்சரா சரமாகுநீ, வழுவிக்கொடங் கிங் கோடியே வரநல்கமுன் வரவஞ்சியே, நழுவிக் கொ(ண்)டே திரிகின்றதென் நாராயணு நாராயணு.

இ-ள். நெடியதாய் வளர்ந்திராநின்ற உமது பருத்த திருமேனியானது எனது கைக்குள்ளே வந்து அகப்படுமென்று நான் தழுவிக்கொள்ளத் திரிகின்றேன். சகல சராசரங்களாகிய தேவரீர் என்முன்னேவந்து வரததைக் கொடுக்கப்பயநது அங்கு மிங்கும் ஓடி வழுவிக்கொண்டும் நழுவிக் கொண்டும் திரிகின்றது என்சொல்லும்? ஸ்ரீமந் நாராயணு எ-று. 72

எனைக்காக்கநீ வரன்மேன்மையென் றிருப்பாய்பராக் கதுவுண்டுநின், றனைக்காத்தவா கனமில்லையோ தகுசேனைகா வலனில்லையோ, நினைக்காத்தசே டனுமில்லையோ நினைவில்லையோ விமையோர்பிரா, ணனைக்காத்தமா ருதியில்லையோ நாராயணா நாராயணா.

இ-ள். அடியேனை இரட்சிக்கவருதல் மேன்மையென் றெண்ணியிருப்பீர்; அவ்வாறு இருக்குமெண்ணத்தில் பராக்கு வநததோ? அல்லது தேவரீருக்கு வாகனமாகவும் துணையாகவும் காத்துக்கொண்டிராநின்ற கருடனும் சேனைக்காவலனும் ஆதிசேஷனும் தேவர்களாகிய வானவர்களுயிரை இரட்சிக்கச் சஞ்சீவி கொண்டுவந்த அநுமானும் இவர்களில்லாமற் போனார்களோ? அல்லது திருவுள்ளத்தில் ஞாபக மில்லையோ? சொல்லும் ஸ்ரீமந் நாராயணா எ-று. 73

கண்பொன்றுகோ மகன்மாற்றவன் கடுகொத்த பொய்க் கிருள்பார்த்ததோர், பண்பொன்றநூலுரைசெய்யநான் பலபொய்ச்சொலால் விளையாடினேன், மண்பொன்றி நீரனல்பொன்றிவிண் வளிபொன்றவே வருமன்றுநின, நண்பொன்று நீ தரல்வேண்டுமே நாராயணா நாராயணா.

இ-ள். கண்பார்வைபோன திருதராஷ்டிரன் குமாரனாகிய துரியோதனனுக்குப் பகைவனான தர்மராசன் கடுகளவு பொய் சொன்னதினாலே இருள்சூழ்ந்த நரகத்தைப் பார்த்தானென்று ஒப்பில்லாத பண்புபோன்ற சாஸ்திரஞ் சொல்லும்

போதும் நான் அநேகமான பொய்களை விளை யாட்டாகச் சொல்லினேன். ஆதலால் எனக்கு என்ன கதியோ தெரியவராது. பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களும் தேவரீர் குட்சியில் அடங்குங்காலத்திலே அடி யேனும் வந்து சேருவேன். அப்போதாகிலும் உமது நண்பொன்றுமாத்திரம் வைத்து இரட் சித்தருளவேண்டும் ஸ்ரீமந் நாராயணா எ-று. 74

போகேந்திரன் சிரமேந்துநின் பூதேவிபுல் லரையேந்தவே, ஆகேனெனு வுரைசெய்வனே லடியேனையேந் துகைவேண்டுவாய்,மாகேந்திரன் றனதம்பியே வடவேங்கடா சலவள்ளலே, நாகேந்தியே நகமேந்தியே நாராயணா நாராயணா

இ-ள். சர்ப்பங்களுக்கு இராசனாகிய ஆதி சேஷன் முடிகளிலே ஏந்தாநின்ற உமது தேவி யாகிய பூமிதேவியானவள், பாபிகளைத் தாங்கு தற்கு வருத்தமாயிருக்கிறதென்று தேவரீருடைய திருச்செவியிலே விண்ணப்பஞ் செய்தருள்வா ளாகில், அடியேனைமாத்திரம் தாங்கிக்கொள்ளும் படியாய் வேண்டிக்கொள்ளவேணடும். தேவேந் திரனுக்குத் தம்பியாகவும், திருவேங்கடமலைக்கு நாயகனாகவும் பொருநதிய வள்ளலே! பாஞ்ச சன்னியத்தையும் கோவர்த்தனகிரியையும் ஏந்தி யருளாநின்ற ஸ்ரீமந் நாராயணா எ-று. 75

ஊழிற்பிறந் திடுபாவநோ யுடலைத்தொடா வகைதந்திடாய், வாழிக்குநா யகனிந்திரன் மனு வின்பதம் பெறவிச்சியேன், ஆழிக்கையுன்

கொடைமிக்கதென் றடியேன்மிகப்பெறலாகுமோ, நாழிக்குடங் கலங்கொள்ளுமோ நாராயணு நாராயணு.

இ-ள். இகத்திலே மனுச்சக்கரவர்த்தியினுடைய பதமும், பரத்திலே வாழ்வுக்கு நாயகனுகிய இந்திரனுடையபதமும் இச்சையாகவேண்டுவதில்லை. ஆதலால் ஊழ்வினையினுலே பிறந்திடாநின்ற பாவநோயானது அடியேனுடைய தேகத்திலே சேராவகை செய்தருளிய பரமபதத்தைத் தேவரீர் கடாட்சித்தருளவேண்டும். திருவாழிதரித்த திருக்கரத்தை யுடையவனே! உம்மிடத்திலே மிகுந்த தியாகம் உண்டென்று நானிச்சைகொண்டதினுலே மிகுந்து வருமோ? என்பிராப்தி எவ்வளவோ அவ்வளவே முடியும். அது எத்தன்மையென்ருல், நாழிக்குடத்தைக் கொண்டுபோய்ச் சமுத்திரத்திலே யமிழ்த்தினுல் நாழிகொள்ளுமேயன்றி கலங் கொள்ளுவதில்லை ஸ்ரீமந் நாராயணு எ-று. 76

தனுவுக்குளே யுளராறுபேர் சலிகைக்குநாயகருன்னை நான், பனுவற்சொலா வகைதட்டுவார் பழகிச்சதா நெறிகட்டுவார், அணுவற்றசோரரையெற்றியேயடியேனையாளரசென்னவே, நணுகிக்கொடே திரிகின்றனன் நாராயணு நாராயணு.

இ-ள். என்னுடைய தேகத்துக்குள்ளே இராநின்ற காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்று சொல்லாநின்ற இந்த ஆர்பேர்களுண்டு. அவர் சலிகைக்கு நாயகராகிய

தேவரீருக்குக் கவிதைகள் பாடாதவகை தட்டுவார். நித்தியமும் பழகின மார்க்கத்தையுங் கெடுப்பார். ஆதலால் கிரமம் நீங்கிய அத்திருடர்களைக் கொன்று அடியேனை ரட்சித்தருளும் கர்த்தனே யென்று அடுத்துக்கொண்டு திரிகின்றனன் ஸ்ரீமந் நாராயணா எ-று. 77

உடைச்சேலைதா குழைக்கோலைதா யுணச்சோறுதா பணப்பேறுதா, கடைப்பூவடா வடைக்காயடா கறிக்காசடா கடைக்கோளனே, கிடைக்கோடிவா முடிச்சேதடா கிறுப்பாவையார்வெறுப்பார்பொலா, நடைக்காசையா யிறுத்தேனலோ நாராயணா நாராயணா.

இ-ள். உடுக்கிறதற்குச் சேலை தாடாவென்றும், காதுக்குப் பொன்னோலை தாடா வென்றும், உண்கிறதற்குச் சோறு தாடாவென்றும், மிகுந்த பணங்களைத் தாடாவென்றும், கடைப்புஷ்பங்களை வாங்கித்தாடா வென்றும், பாக்கு வெற்றிலை தாடாவென்றும், கறிக்குக் காசுதாடா வென்றும், கடைப்பட்ட கோளனேயென்றும், படுக்கைக்கு ஓடிவடாவென்றும், அடிச்சோமனிலே முடிச்சேதடாவென்றும், கிறுதாகப் பேசி வெறுத்துக் கொள்ளாநின்ற வேசியருடைய பொல்லாத நடத்தைகளிலே ஆசையாய்த் திரவியத்தையெல்லாம்இழந்துவிட்டுவிழலனேனேன் ஸ்ரீமந் நாராயணா எ.று. 78

கன்னிப்பெருங் கடலோடுவான் கப்பத்திலே விளையாடுவான், உன்னிக்கொளும் பயமென்

னநோ யொருபட்டுநெஞ் சொருமிக்கிலேன், என்னிற்பயந தெளிவித்திடா யல்லோர்க்குமீந் தென்மட்டிலே, நன்னிக்குணம் பிடிபட்டதே நாராயணா நாராயணா.

இ-ள். பெரிதாகிய கடலிலே நீந்தவும், கம்பத்திலேறி விளையாடவும், பொருந்திய இளம் புத்தியையுடையவன் சென்றபிற்பாடு நினைத்துக் கொள்ளாநின்ற பயங்களைப்போலே நோயானது வருத்தியும் எனது நெஞ்சு ஒருமித்ததில்லை. ஆகையால், என்னிடத்திலே உண்டாகிய பயத்தைத் தெளிவித்தருளவேண்டும்; யாவருக்குங் கிருபைசெய்கிற நீ என்மட்டுஞ் செய்தருள உமக்கு லோபகுணம் பிடிபட்டதோ? ஸ்ரீமந் நாராயணா எ-று. 79

புட்புள்ளவன் கொடியென்னவே பொற்பொன்னவன் கலையென்னவே, கட்புண்டரீ கமலத்தினேர் கண்ணென்னவே கரைகின்றிலேன், சட்புள்ளவுன் சமயத்திலே சலமண்டினேன் சரணண்டினேன், நட்புள்ளதோ பகையுள்ளதோ நாராயணா நாராயணா.

இ-ள். பட்சிரூபமாகிய கருடக்கொடியனே யென்றும், வண்மைபெற்ற சுவர்ணவஸ்திரனே யென்றும், தேனோடுகூடிய சிவந்த தாமரைக்கண்ணனே யென்றும், கரைந்துருகாத பாவியானவன் உமது சமயத்தில வயிராக்கியம்பொருந்தித திருவடி யடைந்தேன். அடியேனிடத்திலே நேசமிருக்குமோ? பகையிருக்குமோ? தெரியவராது ஸ்ரீமந் நாராயணா எ-று. 80

கச்சுப்பிதிர்ந் தெழுகொங்கையார் கடைவாள் விழிப் படைகோடிகள், தச்சுக்கிடந் திடுநெஞ் சிலே தனியம்புதைத் தவருய்வரோ, பிச்சுத்தயா பரனுனநீ பெருமந்திரந் தனிலாற்றுவாய், நச் சுப்பெருஞ் சுதைவேலையாய் நாராயணு நாரா யணு.

இ-ள். கச்சடங்காமலெழுந்த கொங்கைகளை யுடைய கன்னியர் கடைக்கண் பார்வையாகிய ஆயுதகோடிகள் எனது நெஞ்சிலே தைத்துரு கிப் புண்ணுகியது. அந்த நோயை என்சொல் வேன்? ஒருபாணம் பட்டவர்கள் பிழைப்பதில் லையே? ஆதலால் நித்தியபரனுகையினுலேயே இந் தப் பாணங்களைப் பிடுங்கிப் புண்களை உமது பெரி தாகிய திருமந்திரத்தினுலே ஆறும்படி செய் தருளவேண்டும் ஆசையுடனே உயர்ந்த அமிர் க்கடலிலே மேவும் ஸ்ரீமந் நாராயணு எ-று. 81

எய்தாரிருந் திடவம்பைநோ மிழிவாளர் போற் பழிபாதகம், செய்தாரிருந் திடலன்றியே தெய்வநதனைச சிதைவாகவே, வைதாவதென் விதனத்திலே வழிதப்புமே வாய்பாறுமே, நைதா துவின் பரகாரனே நாராயணு நாராயணு.

இ-ள். பாணத்தை யெய்தவனிருக்க, அம்பை நோகாநின்ற இழிவாளர்போல பழிபாதகஞ் செய்த நானல்லவோ அனுபவிக்கவேண்டும். அதுவன்றித் தேவரீரை விதனத்தினுலே கெடுத லாக வைதென்ன பிரயோசனம்? இதனுல் நன் மார்க்கமுஞ் சத்தியமுங் கெட்டுப்போகுமேயன்றி

வெறில்லை. சரமதிசையிலே நைந்துபோகாநின்ற தாதுவுக்குவயித்தியனாகிய ஸ்ரீமந்நாராயணா எ-று.

முகிலுக்குளே யடிபட்டவோர் முதுமக்கள் போற்றுணிவிக்குநோய், மிகவற்பமோ விடுவித் திடாய் விமலத்தநீர் மடுவுக்குளே, துகிலைக் கொடாய் துகில்விட்டிடாய் தொழவெட்கமே விய மைக்கணார், 'நகிலுக்குள்வீழ் நகையச்சுதா நாரா யணா நாராயணா.

இ-ள். மேகவருஷத்தி லடிபட்ட கிழவர்கள் வருத்தத்தை யடைந்து, இறக்குமாப்போலே அடியேனிறக்கும்படியாய்த் துணிந்து செய்யா நின்ற நோயானது பெருகுதல் சொற்பமல்லவே. ஆதலாலது நீங்கும்படிக்குக் கடாட்சித்தருள வேண்டும். முன்னாளையிலே, பரிசுத்தமான சலத் தோடுங்கூடிய யமுனாநதியிலே ஸ்நானம் பண்ணா நின்ற கோபிகாஸ்திரீகளுடைய வஸ்திரங்களை அபகரித்துக் கொண்டுபோய்க் கொடாமலும், விட்டுவிடாமலும், நின்றகாலத்திலே அவர்களும் மைத் தொழுது கேட்க வெட்கத்தை யுடையவர் களாய் மைதீட்டிய கண்பார்வையானது, தங்கள் கொங்கையிலே படியத்தக்கதாய்த் தலையைக் கவிழ்த்துக்கொள்ள நகைத்தருளாநின்ற ஸ்ரீமந் நாராயணா எ-று. 83

கமலத்தைவந் தயல்வண்டுணுங் கருதாத தேரைகளொக்கவே, அமலத்தைநீரிடைவாழினு மதுபோலவே, யயலாரெலாம், நிமலப்பதந் தொழுமூரிலே நிலைபெற்றிருந் துனைவத்தியேன்,

ஞமலிக்குமோ றருள்செய்திடு நாராயணு நாரா யணு.

இ-ள். பரிசுத்தமான சலத்தோடுங்கூடிய தடாகத்திலே யிராநின்ற தாமரையினுடையபெரு மையை அத்துடனே பிறந்த தவளை யறியமாட் டாது; பக்கங்களிலேயிருந்து வண்டுக ளதின் தேனை சாப்பிட்டுச்சந்தோஷத்தையடையும். அது போல தேவரீர் நிலைபெற்றிராநின்ற ஊரிலே, அடியேனிருந்துந் தேவரீரைத் தோத்திரம்பண் ணிக் கடைத்தேற வறியேன். அயலிலே இரா நின்ற பிரம்மாமுதலாகிய பேர்களெல்லாந் தேவ ரீருடைய பரிசுத்தமான திருவடியைத் தொழுது கடைத்தேறுகிறுர்கள், கடைகெட்ட சுவானத் துக்கும், கிருபை செய்தருளின ஸ்ரீமந் நாரா யணு எ-று. 84

என்மாடுவீ டென்பிள்ளைபெண் டென்காணி மண் ணென்சொம்மெனும், தன்மாலிலே யறியாத பேர் தமதாகுமோ தானுவதார், வன்மாயமென் றதுகண்டுநின் வடவேங்கட பதிவைகியே, நன் வானுயர் நிலைநிற்பரோ நாராயணு நாராயணு.

இ-ள். என்மாடென்றும். என்வீடென்றும், என்பிள்ளையென்றும், என்பெண்சாதியென்றும், என்காணி மண்ணென்றும், என்னுடைமையென் றும், தங்கள் மயக்கத்தினுல், மூடரானபேர் சொந்தமென் றிருப்பார்கள், அவைகள் தங்கள தாகுமோ? அவைகளுக்கும், இவர்களுக்கும், சம் பந்தமென்ன? இவையெல்லாம் வலிய மாய்கை

யென்று தெளிந்து நன்மைபெற்ற மானிடரெல்லாந் தேவரீருடைய திருமலையை நித்தியபதார்த்தமென்று நினைத்துத் தங்கி உயர்ந்த நிலைபெறுவார்கள் ஸ்ரீமந் நாராயணு எ-று. 85

பரலோகமும் பரரூபமும் பரபோகமும் பரமாயுவும், சுரலோகமுஞ் சுரரூபமுஞ் சுரபோகமுஞ் சுரராயுவும், திரலோகமென் றிவையாவையுந் திருவேங்கடந் தனிலுள்ள தால், நரலோகமே மிகநன்றுகா நாராயணு நாராயணு.

இ-ள். பரமபதமும், திவ்விய திருமேனியும், நித்தியானந்தமும், நித்திய தத்துவமும், மற்ற இமையவர் நாடும், இமையவர் மேனியும், இமையவர் ஆயுளும், இமையவர் போகமும், இமையவர்களுக்கு நாயகனுகிய இந்திரனுடைய பதவியும் இவைகள் முதலாகிய ஐசுவரியங்களெல்லாந் தமது திருவேங்கடத்தை யடைந்த பேர்களுக்கெல்லாமுண்டாகிய தன்மையினுலே இந்த நரலோகமே மிகுந்த நன்மையானது. ஸ்ரீமந் நாராயணு எ-று. 86

அசவாதவன் பறிவேடரா ரடியேனுடம் பிணிநோயெலாம், கசவாது தின்பவர்போலவே கவராமலிங் கருள்கூறுவாய், குசவாயுதா சிறுகோவலா குறுவேதியா குலமன்னவா, னசவாவியிற் பயிலன்னமே நாராயணு நாராயணு.

இ-ள். அஞ்சவில்லாமல் வலியபழியைச் செய்யாநின்ற வேடரானவர்கள், தயவில்லாமல் மிருகங்களைக்கொன்று தின்னுமாப்போலே அடி

யேனுடைய தேகத்தைப் பிணியானது பிடுங்கித் தின்னாமல் இவ்விடத்திற் கிருபைசெய்தருள வேண்டும். கலப்பையாயுதத்தை யுடையவனே! இளமையாகிய கோபாலனே! குட்டனாகிய வாமனனே! சூரியகுல மன்னவனே! மானச மடுவிலே விளையாடாநின்ற அன்னரூபமாகிய ஸ்ரீமந் நாராயணா எ-று.

87

மீன்கூருமங் கிடிபாதியாண் மிருகங்குறள் பரசாளிகோ, மான்கூறலா யுதனாயன்மேல் வருவாகியும் பெருவாசியோ, தேன்குருமா கமசாரமூஞ் சிறுபோகமோ கமசாரமும், நான்கூருரை குருபத்தனே நாராயணா நாராயணா.

இ-ள். மச்சமென்றும், கூர்மமென்றும், வராகமென்றும், நாசிங்கமென்றும், வாமனனென்றும், பரசுராமனென்றும், ஸ்ரீராமனென்றும், பலராமனென்றும், ஸ்ரீகிருஷ்ணனென்றும்,வந்ததல்லாமல் மேலும் கற்கியாய் வருவதினாலே உமக்குப் பெரிதாகிய பலனுண்டோ? மதுரம்பொருந்திய ஆகமசாஸ்திரமுஞ் சிற்றின்பமாகிய காமசாரமும் நான்குசாரமும் ஓதுவித்த குருவாகிய சாந்திபருக்குப் பக்தனாகிய ஸ்ரீமந்நாராயணா எ-று.

மிறுக்கத்தகா தெனதாவியின் விளக்கிற்கு நின்னருணெய்யிடாய், பொறுக்கத்தகா ததுமெய்யுடல் புழுக்கத்தகா தொருபோரிலே, குறுக்கிட்டபேர் நடுக்கிட்டிடக் குலேவாணனார் திரடோளெலாம், நறுக்கிக்கையோர் துணைவிட்டவா நாராயணா நாராயணா.

இ-ள். அவமாகிய எனதுதேகமானது புழுக்கங்கொண்டு பொறுக்கத்தகாமல் இறந்துபோகிறது தகுதியான காரியமல்லவே. ஆதலால் உயிராகிய விளக்கானது அவிந்துபோகாமல், தேவரீர் கிருபையாகிய நெய்யமுது பெய்தருளவேண்டும். ஒப்பில்லாத யுத்தமுகத்தில் குறுக்கிட்ட சிவன் முதலாகியபேர் நடுக்கங்கொள்ளப் பொல்லாதவாணாசுரனுடைய விஸ்தாரமானதோள்களை யெல்லாஞ் சக்கரத்தினாலே நறுக்கி இரண்டு கையைமாத்திரம் விட்டருளிய ஸ்ரீமந் நாராயணா எ-று. ௪௯

புன்சொல்லிலே யகப்பட்டதும்போதாமலே யவமேற்றெனக், கென்சொல்லுவோ மெனவெண்ணியோ யாதோவெ னக்கீயாது நீ, தென்சொல்லிலே வடசொல்லிலே திருவாய்மொழிச் சதுர் வேதமா, நன்சொல்லிலே விளையாடுவாய் நாராயணா நாராயணா.

இ-ள். அடியேனுடைய மூடபுத்தியினாலே பாடாநின்ற புல்லிதாகிய கவிதைச் சொல்லிலே அகப்பட்டதும் போதாமல், எனது அக்கியானத்தையெல்லாம் ஏற்றபடியினாலே இவனுக்கு என்ன சொல்லுவோ மென்று திருவுள்ளத்தி லெண்ணியதோ என்னமோ கிருபைசெய்தருளாமலிருப்பதை அறிகிலேன். தமிழாகிய தென்சொல்லிலேயுங் கிரந்தமாகிய வடசொல்லிலேயுந் திருவாய்மொழி யென்னும் நான்குவேதத்தினுடைய நன்மைபெற்ற சொல்லிலேயுந்திருவிளையாடல் செய்தருளாநின்ற ஸ்ரீமந்நாராயணா எ-று.

மெலியாமையுந் திருஞானமு மிகுபோகமுந் திடதேகமும், சலியாமையும் பகைநாசமுந் தன ராசியுந் தருசீலமும், கலியாணமும் பெறநீதரக் கடனுளியாற் பினுமுன்னேநான், நலியாமலே யருள்கூறுவாய் நாராயணு நாராயணு.

இ-ள். மெலிதலில்லாமையும், அழகியஞான மும், மிகுந்த போகமும், வலிய தேகமும், சலியாமையும், பகைநாசமும், திரவியராசியும், யோக்கியமான ஆசாரமும், கலியாணமும், இவையெல்லாந் தேவரீரிடத்தில் பெறும்படியான கடனுளியானதால், இனி உம்மை நான் வருத்தாமல் பூரணமான கிருபை செய்தருளவேண்டும் ஸ்ரீமந் நாராயணு எ-று. 91

சமர்த்தேதுநல் லறமேதருந் தயையேதருந் தவமேதுமிக், கமைத்தேதுமே லடைவேதுகா ரணமேதுபூ ரணமேதுசங், கமத்தேதுரா கதமேதுசொல் கமையேதுசொல் கதியாவுநீ, நமத்தேதுவா ரகைவாசனே நாராயணு நாராயணு.

இ-ள். சாமர்த்தியங்கள்தானேது? நல்ல தருமங்கள்தானேது? அருமையான தயவுகள்தானேது? அரிய தவங்கள்தானேது? மிகுந்த அமைப்புகள்தானேது? மேலாகிய அடைவுகள்தானேது? காரணங்கள்தானேது? பூரணங்கள்தானேது? கூட்டங்கள்தானேது? ஆணவங்கள்தானேது? சொல்லிய பொறுமைகள்தானேது? சொல்லாநின்ற மோட்சங்கள்தானேது? இவைகள் யாவும் தேவரீருடைய கிருபையேயன்றி

வேறில்லை. ஆதலால் உமது திருவடிகளுக்கே நமஸ்காரஞ்செய்து நின்றேன் துவாரகாவாசனாகிய ஸ்ரீமந் நாராயணா எ-று. 92

பித்தங்கயஞ் சொறிதே மல்கம் பிதமீளைகா மாலைபாண்டுவுன், மத்தஞ்சுரஞ் சளிசன்னிகால் வலிசூலைவிக் குதல்கக்குவா, யுத்தம்பனந் தலை நோவுமற் றுளநோயெலாந தொடராமலாள், நத்தன்மூதற் கொருகாலனே நாராயணா நாராயணா.

இ-ள். பித்தம் - க்ஷயம் - சொறி - வெள்ளைப் பாண்டு-நரை - ஈளை-காமாலை-பாண்டு-உன்மத்தம்-சுரம் - சளி - சன்னி -கால்வலி-சூலை-விக்கல்-கக்குவாய்- தம்பனம் தலைநோய் மற்றுஞ் சொல்லா நின்ற நோய்களெல்லாம் அடியேனைத் தொடராமல் இரட்சித்தருளவேண்டும். நத்தன் மூதனுக்கு ஒரு இயமனாகிய ஸ்ரீமந் நாராயணா எ-று.()

துறையூருமா மூதலைக்குலச் சுனையொத்த மன்னவர் வாசலில்,குறையூர்வதுங் கசைசாடவே குலைக்கின்றதுந் தலைசோரியாய், மூறையூர்வதும் பிறகுன்னையே முனிபாவமுந் தெரியேனலன், நறையூரனே கருடாசலா நாராயணா நாராயணா.

இ - ள். மூதலைக் குலஞ் சஞ்சரியாநின்ற துறையையுடைய சுனைபோலேயிராநின்ற துஷ்ட மன்னர் வாசலிலே குறைவுகளைச் சொல்லுமிடத்தில், அவர்கள் தருமம் விசாரியாமல் நேர்ந்தபடிக்குப் பிரம்புகளாலே அடித்திடத் தேகம் நொந்து தலைகளிலே உதிரம் பெருகும்போது

முறையமிட்டுக் கேள்வியில்லாமல் பிற்பாடு தேவரீரைத் தெய்வமேயென்று வெறுத்துக்கொள்பவருடைய பாவந் தீர்வதேயில்லை. ஆதலால் தேவரீர் சந்நிதானத்திலே முன்னம் முறையமிட்டேன்; திருநறையூரிலேயுந் திருவேங்கடமாகிய கருடாசலத்திலேயும் நிலைபெற்ற ஸ்ரீமந் நாராயணா எ-று. 94

பிணிவிட்டதே விதியாவையும் பிழைவிட்டதே சுகசீவியாய், பணிவிட்டதே தமனுரெனும் பகைவிட்டதே பலபூசலும், தணிவிட்டதே யதிஞானமே தகவிட்டதே யுனையோதவாய், நணிவிட்டதே யென்மட்டிலே நாராயணா நாராயணா.

இ-ள். அடியேனுடைய சனனங்கள்தோறுந் தொடராநின்ற பிணிகளையும், விதிகளையும், எமன் பகைகளையும், மன்மதன் சண்டைகளையும், இவை முதலாகிய யாவையும் நீக்கிச் சுகசீவியாகவும், அதிக ஞானியாகவும், வாக்கினாலே உம்மைஓதும படியாகவும், என்மட்டிலே பொருந்துதலாகத் தேவரீருடைய கடாக்ஷ வீட்சணியஞ் செய்தருளியது ஸ்ரீமந் நாராயணா எ-று. 95

வாய்செய்தபுண் ணியங்கோடியென், வழி செய்தபுண் ணியங்கோடியென், தாய்செய்தபுண் ணியங்கோடிதந் தையர்செய்தபுண் ணியங்கோடியென், பாசெய்தபுண் ணியங்கோடியென் பதி செய்தபுண் ணியங்கோடியென், நான்செய்தபுண் ணியங்கோடிகாண் நாராயணா நாராயணா.

இ-ள். எனது வாக்கும, எனது மரபும, எனது மாதாவும், எனது பிதாவும், எனது பாட

லும், எனது ஊரும், எனது நாவும், இவைகளெல்லாஞ் செய்த புண்ணியம் அநேகங்கோடியானபடியினலே தேவரீரைப் பிரசன்னமாகக் காணக்கிடைத்தது ஸ்ரீமந் நாராயணு எ-று. 96

உன்கோயிலென் கால்சூழவு முன்பாதமென் கண்காணவும், நின்பாடலென் வாய்பாடவு நின் காரியங் கைசெய்யவும், என்காதுநின் புகழ் கேட்கவு மென் னெஞ்சநின் னினைவுன்னவும், நனகாகநல் லரமேயருள் நாராயணு நாராயணு.

இ-ள். உமது திருக்கோயிலை என்கால் சூழவும், உமது திருவடியை என்கண் காணவும், உமது சரித்திரத்தை என்வாய் பாடவும், உமது கைங்கரியத்தை என்கை செய்யவும், உமதுபுகழை எனதுகாது கேட்கவும், உமது தியானத்தை என்னெஞ்சு செய்யவும், இத்தன்மையாகிய நல்ல வரத்தைக் கொடுத்தருளவேண்டும் ஸ்ரீமந் நாராயணு எ-று. 97

இற்கண்ணெலா நாராயணு வெங்கெங்கணு நாராயணு, சொற்கண்ணெலா நாராயணு தொழிலெங்கணு நாராயணு, முற்கண்ணெலா நாராயணு முகமெங்கணு நாராயணு, நறகண்ணெலா நாராயணு நாராயணு நாராயணு.

இ-ள். வீடுகள் யாவையினும் வெளிகள் யாவையினும், சொல்லுகள் யாவையினும், தொழில்கள் யாவையினும், முன்னிடங்கள் யாவையினும், முகங்கள் யாவையினும், நல்லிடங்களெல்லாவற்றிலும், பரிபூரணமாயிருப்பது தேவரீர் சொரூப

மேயன்றி வேறொருவருண்டோ ஸ்ரீமந் நாரா யணா எ-று. 98

தேறுந்திருப் பதிவேங்கடா தெரிசித்துநா ரணவென்றுதான், நூறும்படிப் பவர்பன்னுவார் நூறும்மிருந் துலகாண்டபின், பேறும்பெறும் பிள்ளைப்பெறும் பெருமைப்பெறும் பெறுவிப் பையே நாறுந்துழா யணிமார்பனே நாராயணா நாராயணா.

இ-ள். வேதமுடிவிலே தேருநின்ற திரு வேங்கட மென்னுந் திருப்பதியைத் தரிசித்து ஸ்ரீமந் நாராயண சதகம் நூறுபாடலையும், படிப் பவர்களும், அர்த்தங்களாராய்பவர்களும் நூறு வருஷமிருந்து பிள்ளைகள் முதலாகிய உலகாட்சி யினது பலனை அனுபவித்தபிற்பாடு அவர்களுக் குப் பெருமையைப்பெற்ற பரமபதத்தைக் கடாட் சித்தருள்வாய், பரிமளிக்குத் திருத்துழாயணிந்த திருமார்பையுடைய ஸ்ரீமந் நாராயணா எ-று. 99

நனிவாழிநின் பல்கோயிலு நனிவாழிநின் பலதேவிமார், நனிவாழிநின் னடியாரெலா நனி வாழிநின் பல்வைபவம், நனிவாழிநின் வட வேங்கட நனிவாழிநின் கனிகற்றபோ, நனிவாழி நின் கவிகேட்டபேர் நாராயணா நாராயணா.

இ-ள். சோழநாட்டிலும், பாண்டியநாட்டி லும், மலைநாட்டிலும், நடுநாட்டிலும், தொண்டை நாட்டிலும், வடநாட்டிலும், தேவரீர் நித்திய வைபவமாய் விளங்காநின்ற திருவரங்கம் பெரிய கோயில்முதல் பரமபதம் அந்தியமாகவிராநின்ற

நூற்றெட்டுத் திருப்பதியிலும், பாகவதர்கள் உச்சீவிக்கத் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிரா நின்ற தேவரீருடைய திருக்கோயில்களெல்லாம் பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாகவாழக்கடவது; தேவரீருடைய வக்ஷஸ்தலத்தி லின்பமுற்று வீற்றிராநின்ற மகாலட்சுமியும், பூமிபிராட்டியும், நீளாதேவியும், பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவது. திரிகாலங்களிலும், இடைவிடாமல் தமது திருவுள்ளமே ஆலயமாகச் செய்துகொண்டு தேவரீரைத் தியானஞ்செய்யும் கடல்சூழ்ந்த இவ்வுலகத்தின்கண்ணுள்ள பரம பாகவதர்கள் யாவரும் பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவது. தேவரீருடைய மகிமையுற்று விளங்கும் வைபவங்கள் பல்லாண்டு வாழவும், சமஸ்கிருத பாஷைக்கும், திராவிடபாஷைக்கும், எல்லையாகியும், சதுர்வேதங்களும், மற்ற சாஸ்திரங்களும் சொல்லப்பட்ட பொருள்களுக்கெல்லாம் முடிவாகியும், தர்மமே சொருபமாகியும், பூமிதேவிக்கு மணிமுடியாகியும், தனக்கொப்பில்லாமல் பெருமைபொருந்திய சொர்ணமயமாகியும், ஓங்கிய தேவரீர் எழுந்தருளியிராநின்ற வடக்கின்கணுள்ள திருவேங்கடமலையும், பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவது. திரிகாலக்கியானிகளாகியவசிஷ்டவாமதேவவிஸ்வாமித்ரவியாசபராச சவுனகாதிரிஷிகளும், மகாத்துமாக்களாகிய நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்களும், பதோத்தாரகராகிய இராமாநுஜாசாரியரும், வரகவிகளான தண்டிபவுபதி காளிதாசன் கம்பர் முதலாகிய கவிசக்ரவர்த்திகளும், பரம

பாகவதோத்தமர்களாகிய அழகிய மணவாள பிள்ளைப்பெருமாளையங்கார் முதலாகிய பரமபாகவதர்களாற் செய்தருளிய வேதங்களும், வைணவாகமங்களாகியஸ்ரீபாஞ்சராத்ரவைகாசனங்களும் இதிகாச ராமாயண பாரதங்களும், வாமம்வராகம் முதலிய புராணங்களும், மற்றுமுள்ள நூல்களாகிய இவைகளில்சொல்லப்பட்டிருக்கிற தேவரீருடைய நித்யகல்யாணகுணங்களை அத்தியயனஞ்செய்த பாகவதர்கள் யாவரும் மிகுதியாக வாழக்கடவது. இவ்வாறு மகிமையுற்ற தேவரீர் விஷயமாக செய்தருளிய கவிகளை சிரவணாநந்தத்துடன் கேள்வியுற்ற பாகவதர்களியாவரும் பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவது ஸ்ரீமந் நாராயணா எ-று. 100

வடவேங்கட நாராயணசதகம்

மூலமும் உரையும்

முற்றிற்று.

ARCHIVES LIBRARY ... MORE, MADRAS
102229
O-16 NP71N
N49

Paper Issue Card No.Q, H. M. S. 259. (3-10-49) 1000 Copies